# திருக்குறள் விழா மலர்

# 2020










## விரிகுடாக் குறள் கூடம்

**www.bayareakuralkoodam.org**



# Let’s find a loan that’s right for you

Bank of America is committed to helping you find a loan to meet your needs. I can provide tailored guidance for your unique situation and go over our available financing options:

| | |
|---|---|
| **Affordable Loan Solution® mortgage[1]** | Down payment as low as 3% and no mortgage insurance required — can help make buying a home more affordable for modest-income buyers |
| **Freddie Mac® Home Possible® loan[1]** | Down payment as low as 3% and a competitive rate. Mortgage insurance is required; however, it’s at a reduced cost compared to most conventional loans. |
| **FHA loan[2]** | Down payment as low as 3.5% |
| **VA loan[3]** | Flexible qualifying guidelines for U.S. veterans |
| **Jumbo loan** | Financing for homes up to $5 million[4] |
| **Doctor loan[5]** | Down payment as low as 5% for medical professionals |

We also connect borrowers to programs that can help with your down payment and closing costs.[6] I look forward to helping you find a home loan that’s right for you.

BANK OF AMERICA

## Let’s connect today!



Bank of America's Digital Mortgage Experience™

Get started on my website. Lock in your rate. Get help when you need it.

**KAVITHA SENTHILKUMAR**
Sr Lending Officer
NMLS ID: 297121
925.413.8317 (Direct)
925.389.3286
4900 HOPYARD RD
Pleasanton, CA 94588
kavitha.senthilkumar@bofa.com
https://mortgage.bankofamerica.com/kavitha-senthilkumar

[1] Maximum income and loan amount limits apply. Fixed-rate purchase loans, primary residences only. Certain property types are ineligible. Maximum loan-to-value (“LTV”) is 97%, and maximum combined LTV is 105%. For LTV >95%, any secondary financing must be from an approved Community Second Program. Homebuyer education may be required. Other restrictions apply.

[2] Monthly Mortgage Insurance Premiums (MIP) and Upfront Mortgage Insurance Premiums (UFMIP) apply. Maximum loan amounts vary by county.

[3] VA funding fee applies except as may be exempted by VA guidelines. The fee is higher with a zero down payment, and maximum loan limits vary by county. If a down payment of 5% or more is made, the fee is reduced. The VA funding fee is non-refundable. Ask for details about eligibility, documentation and other requirements.

[4] Minimum down payment requirements vary by property type and location. Loan amount, interest-only payment option, loan-to-value percentage, property and/or occupancy type may require a higher level of reserves and/or post-closing liquidity. Two separate full appraisals may be required. Excellent credit required, including proof of recent consistent housing payment history. Not available on all loan programs. Other restrictions apply; ask for details.

[5] An applicant must have, or open prior to closing, a checking or savings account with Bank of America. Applicants with an existing account with Merrill Edge®, Merrill Lynch® or U.S. Trust prior to application also satisfy this requirement. Eligible medical professionals include: (1) medical doctors who are actively practicing (MD, DDS, DMD, OD, DPM, DO), (2) medical fellows and residents who are currently employed or in residency/fellowship, or (3) applicants who are medical students or doctors and are about to begin their new employment/residency or fellowship within 90 days of closing. Must be actively practicing in their field of expertise. Those employed in research or as professors are not eligible. For qualified borrowers with excellent credit. PITIA (Principal, Interest, Taxes, Insurance, Assessments) reserves of 4-6 months are required, depending on loan amount.

[6] Down payment and/or closing cost assistance programs may not be available in your area. Down payment and/or closing cost assistance amount may be due upon sale, refinance, transfer, repayment of the loan, or if the senior mortgage is assumed during the term of the loan. Some programs require repayment with interest, and borrowers should become fully informed prior to closing. Not all applicants will qualify. Minimum credit scores may apply. Sales price restrictions and income requirements may apply. Homebuyer education may be required. Owner-occupied properties only. Maximum loan amounts may apply.

Credit and collateral are subject to approval. Terms and conditions apply. This is not a commitment to lend. Programs, rates, terms and conditions are subject to change without notice.

Freddie Mac® and Home Possible® are registered trademarks of Federal Home Loan Mortgage Corporation (FHLMC), known as Freddie Mac.
Bank of America, N.A., Member FDIC. Equal Housing Lender. ©2019 Bank of America Corporation. FL-02-19-0566 | ARV3346C | 00-62-3424D | 03/2019

# விரிகுடாக் குறள் கூடம்

இது கலைஞர்களின் களம்

## விழாமலர் தயாரிப்பில் உறுதுணை

*முதன்மை ஆசிரியர் : காவேரி கணேஷ்*

*ஆசிரியர் குழு : மல்லிகா பாஸ்கரன்*
*திருமுடி துளசிராமன்*
*பூர்ணிமா சண்முகம்*

*வாழ்த்து :*
*திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், M.P.*

*கட்டுரையாளர்கள் :*
- *கவிஞர் அறிவுமதி*
- *R. ரேவதி*
- *முனைவர் பா.ரா.சுப்பிரமணியன்*
- *அழகுதன்யா சீனிவாசன், வயது 6*
- *தேவி நாகப்பன்*
- *பி. மணிகண்டன்*
- *கௌரி சேஷாத்ரி*
- *நாறும்பூநாதன்*
- *திருக்குறள் இசையோடு பேசுவோம்! பிரதீப் சுவாமிநாதனுடன் ஒரு நேர்காணல்*
  *உரையாடியவர் : மல்லிகா பாஸ்கரன்*
- *முனைவர் பா. ஜெய்கணேஷ்*
- *மாடக்குளம் பிரபாகரன்*

*மற்றும்*
*ஓவியப்போட்டியில் பங்கேற்ற குழந்தைகள். அவர்தம் படைப்புகள்*

*வடிவமைப்பு : M. Fairy*

*விளம்பரம் மற்றும் ஏனைய தொடர்புக்கு :*
support@bayareakuralkoodam.org

## முன்னுரை




தமிழ் நெஞ்சங்கள் அனைவருக்கும் விரிகுடாக் குறள் கூடத்தின் சார்பில் எமது அன்பு வணக்கங்கள்.

தமிழ் நமக்கு ஈந்த அற்புதங்களில் ஒன்று திருக்குறள். உலகில் எவர்க்கும் கிடைத்தற்கரிய அறிவின் ஊற்று நம் வள்ளுவன். எந்த மொழிக்கும் எந்த சமுதாயத்திற்கும் அவ்வளவு எளிதில் கிடைத்திராத அரிய நூல் திருக்குறள்.

நட்பின் சிறப்பு, ஒற்றுமையின் பலம், வள்ளல் குணத்தின் மேன்மை, கல்வியின் பயன், நன்றி உணர்வின் அவசியம், அப்பழுக்கற்ற செல்வத்தின் அருமை என வாழ்வின் பொருள் அத்துணை விடயங்களையும் எடுத்துக்காட்டி "திருக்குறள்" என்ற ஊர்வலம் நடத்தியுள்ளான்.

நமது தாய் திருநாட்டில் வள்ளுவன் எமக்குத் தான் சொந்தம் எனக் குரல் எழுப்பியது அறிந்தோம்

அல்லவா? சகோதரர்களாகிய நாம் இப்படி நம்முள் சண்டையிட்டுக் கொள்வோம் என்பதை முற்றும் அறிந்த அந்த முழு முதல் ஞானிக்கு முன்பே தெரிந்திருக்கிறது போலும். அதனால்தான் அவன்,

> "எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும்
> அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

எனப் பாடிச் சென்றிருக்கின்றான்.

நம் தாய்நாட்டில் எப்படியோ குடும்பச் சண்டைகள் நிகழட்டும். நம்மின் அடுத்த தலைமுறையினருக்கு அதை எடுத்துச் செல்ல வேண்டாம் நாம்.

வள்ளுவன் கூற்றின்படி, மெய்ப்பொருள் மட்டும் பருகி, நம்மை, நம் வாழ்வை நாம் மேன்படுத்திக் கொள்ளலாம்.

புலம் பெயர்ந்து அன்னிய மண்ணை தமதாக்கிக் கொண்டு வாழும் நம் பிள்ளைகளுக்கு அவன் கூறியதைப் போன்றே திருக்குறளின் வாழ்வியல் பொருளை மட்டுமே கற்றுத் தெளியச் சொல்வோம். அவர்களை நதிமூலம் ரிஷிமூலம் தேடச் செய்ய வேண்டாம்.

நமது திருக்குறள் விழாவுக்கு வாழ்த்துரை நல்கிய மாண்புமிகு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களுக்கு விரிகுடாக் குறள் கூடத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!

திருக்குறள் விழா மலர்-2020 ஆனது, முனைவர் பா.ரா.சுப்பிரமணியன் அவர்தம் கட்டுரையுடன், இதுவரை நமக்கு அளித்த பிரபலங்களின் கட்டுரைகள், மேலும் பல நல்ல கருத்துக்கள் தாங்கிய எழுத்துக்கள் மற்றும் குழந்தைகளின் தூரிகையில் முகிழ்ந்த வள்ளுவ ஓவியங்கள் தாங்கி மலர்ந்துள்ளது.

விரிகுடாக் குறள் கூடம் இந்த குறள் சொல்லித் தரும் ஆர்வமுடைய பெற்றோர்களையும், இந்த சீரிய பணி நடக்க கைகொடுக்கும் 100 க்கும் மேற்பட்ட தன்னார்வலர்களையும், பொருள் ஈந்து சிறப்பாக்கும் புரவலர்களையும், இணைத்து இந்த இமாலய முயற்சியை மேற்கொண்டு ஏழாவது வருடமாக நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றது!

இவர்கள் அனைவரையும் விரிகுடாக் கலைக்கூடம் நன்றியுடன் வணங்குகிறது.

அன்புடன்

*திருமுடி துளசிராமன்*
நிறுவனர்,
விரிகுடாக் குறள் கூடம்.


Madras Café's
MADRAS GROCERIES
Indian Super Market
Wide Range of food Products
Garden Fresh Vegetables
Organic Vegetables & Products
Courteous Customer Care
Ample Parking Space
Clean Environment
Pay with your Smartphone, when you shop with us
Pay | pay | SAMSUNG pay | SoftPay
Check store for
Anniversary SALE!
1187, W.El Camino Real
Sunnyvale, California
TEL: 408.746.0808
Open All Days
Mon - Sun: 9 AM - 10 PM
Authentic
South Indian Thali,
Fresh Roti Naan,
Chaat, Fresh Juice
and more...
Madras
Food Court
For To-Go Orders,
Call - 408.245.2323
Ph: 408.737.2323
Madras Café
South Indian Veg. Restaurant
Oh, it's So Delicious!
Breakfast at 8.30am
Business Hours:
Tue - Fri : 8:30a.m - 2:30p.m & 5:30p.m - 10:00p.m.
Sat-Sun: 8.30a.m - 10.00p.m. Monday Holiday
1177, W.El Camino Real, Sunnyvale, CA 94087
www.madrascafe.us
At the Intersection of El Camino & Bernardo
"tastier than ever"
Stop by once
You Can't Stop you

# வாழ்த்துரை



## காலதேச வர்த்தமானங்களைக் கடந்து நிற்கும் வள்ளுவம்!

25-02-2020

தமிழ்ச்சமூகத்தின் மிகப்பெரிய அடையாள ஆளுமை திருவள்ளுவர். திருக்குறள் என்ற படைப்பு மனிதகுலத்துக்குக் கிடைத்த மாபெரும் வரம். ஒவ்வொரு சாதாரண மனிதனும், மாமனிதனாக உயர்ந்துகாட்ட உதவும் ஒரே காலப் பொக்கிஷம் திருக்குறளாகும். மனித மனத்தைப் பண்படுத்தவும் பொன்னாக்கவும் பயன்படும் சிந்தனைப் பேழையே குறள்நெறி.

உலகமே கொண்டாடும் திருக்குறளைத் தமிழர்கள் சற்றுக் குறைவாகக் கொண்டாடுகிறார்களோ என்று குன்றிமணியளவு சின்னஞ்சிறு ஆதங்கம் எனக்குண்டு. அதைத் துடைத்தெறியும் விதமாக விரிகுடாக் குறள் கூடத்தின் திருக்குறள் பரப்பும் தொண்டு உச்சிமேல் வைத்து மெச்சத் தக்கது.

நிலம்பெயர்ந்தாலும் திருக்குறளை உளம்பெயர்க்காத இந்தத் தமிழர்களின் மாண்பு உவகையூட்டுவதாகும். ஒருநூலை அறிஞர்கள் மட்டும் போற்றினால் போதாது. எளியவர்களும் அதனை எடுத்தோத வேண்டும். குறிப்பாகக் குழந்தைகள் நெஞ்சில் நிறுத்தப்படும் இலக்கியமே நிலமுள்ள வரை நிலைத்து நிற்கும்.

ஒவ்வொரு குறளையும் பொருளுடன் ஒப்பித்து, ஒரு டாலர் பொருள் பெறும் குழந்தைகள் உன்னதங்களைப் பெறுகிறார்கள். மழலைகள் மேதையாகிறார்கள். தமிழின் ஆயுள் நீள உதவுகிறார்கள். பொதுவாகத் திக்குவாய் சரியாக நாவில் தேன் தடவுவார்கள். இனிமேல், திருக்குறளைத் தடவ வேண்டும்!

மகாகவிகள் உங்களோடு பேசக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பார் ரஸ்கின். எங்கே? “உங்கள் வீட்டில், புத்தகங்களின் வடிவில்”, என்பார் அவர். அப்படித்தான் வள்ளுவர் தனது உலக பொதுமறையான குறள் மூலம் நம்மோடு கருத்தாடக் காத்துக் கொண்டிருக்கிறார். வாருங்கள் ! தமிழ்ச்சமூகமே சாதி மத பேதங்கடந்து திருக்குறளைக் கொண்டாடுவோம்.

விரிகுடாக் குறள் கூடத்தினருக்கு வண்ணமிகு வாழ்த்துகள் !

*- தமிழச்சி தங்கபாண்டியன்*


TASTE
5 YEARS
QUALITY & SERVICE
Celebrating our
5th successful year
Thank you for your
continued support
Come
check out our
Mouth watering
Weekend
Specials
MALAIKOTTAI
Indian Chettinad Restaurant
Newpark Plaza
5988 Newpark Plaza, New Park Mall Rd, Newark, CA
(Opp. to Newpark Mall & next to Bhindi Jewelers)
Tel: 510.797.2166, 510.797.2167
www.malaikottai.com
Business Hours:
Tuesday to Thursday 11:30 am to 2:30 pm & 6:00 to 10:00 pm
Friday and Saturday 11:30 am to 3:00 pm & 6:00 to 9:30 pm
Sunday 11:30 am to 3:00 pm & 6:00 to 9:30 pm
Closed Mondays
We deliver food at your doorsteps. Order thru
DOORDASH
UBER EATS
grubHub
yelp EAT24

# அறிவுமதியின் பார்வையில் வள்ளுவம்



கவிஞர் அறிவுமதி அவர்களின் பெயரைக் கேள்விப்பட்டதும் சட்டென்று நினைவுக்கு வருபவை

சினிமாக் கனவுகளோடு வரும் பல இளைஞர்களுக்கு இவர் வீடுதான் வேடந்தாங்கல். இவர் அரவணைப்பில் வாழ்ந்து இன்று சினிமாவில் கோலோச்சுபவர்கள் பலர்

அடுத்தாக நினைவுக்கு வருவது இவர் ஆனந்த விகடனில் எழுதிய சங்கப்பாடல்களைப் பற்றிய தொடர்

முத்தமிழே முத்தமிழே முத்தச் சந்தம் ஒன்று கேட்டதென்ன......

இந்தப் பல்லவியைக் கேட்டவுடன் உளமாரப் பாராட்டினாராம் இசைஞானி.

இவர் இயற்பெயர் மதியழகன், உயிர் நண்பனின் பெயர் அறிவழகன். நட்பைச் சிறப்பு செய்யும் பொருட்டு, தன் பெயரோடு நண்பனின் பெயரையும் சேர்த்து அறிவுமதி ஆனார்.

இவர் போன்ற நல்ல உள்ளம் படைத்தவர்கள் இந்த ஞாலத்தை அழகாக்குகிறார்கள்.

வள்ளுவம் பற்றிய இவரது சில ஹைக்கூக் கவிதைகளுள் சிலவற்றைக் காண்போம்.

தந்தை தந்த
தாய்ப்பால்
முப்பால்

முக்கடல்
இரு துளி
திருக்குறள்

நூற்று முப்பத்து மூன்று x பத்து
பெருக்கப் பெருக்கப்
பெருகும் வாழ்வு

தமிழின்
நீண்ட பயணம்
இரட்டையடிப் பாதை

தமிழ்ப்பால்
சுண்டக் காய்ச்ச
கிடைத்தது ஏடு

இரண்டு அடி கொடுத்தால்தானே
திருந்துவாய்
வாங்கிக்கொள் வள்ளுவனிடம்

உரை ஊற்றி ஊற்றிப்
பார்த்தும்
புளிக்காத பால்

இரண்டிரண்டாய் அலைகள்
குறளோசை
வள்ளுவத்தில் பார் கடல்

வாழ்க்கை கடல்
கலங்கரை விளக்கம்
வள்ளுவர் சிலை

ஊன்றுகோல் வள்ளுவன்
எழுந்து நிற்கும்
விழுந்த இலெமூரியா

PACIFIC GREEN FUNDING



**RAVI SELVARAJ**
NMLS ID 236549
Pacific Green Funding
ravi@PacificGreenFunding.com
(844) 545-6267

# Pacific Green Funding

***Your Mortgage Solution Partner***

*wishes*

*Bay Area Kural Koodam*

*for a successful*

*Thirukkural Vizha 2020*

**Contact us for your needs on**

- Home mortgage
- Purchase
- Refinance

**Join our monthly online Home Buyer Seminar**
to learn more about the home buying process.

Licensed in the state of California and Texas

# வெற்றி பெற உதவும் ஐந்து கேள்விகள்

- R. ரேவதி



நம் அனைவரது வாழ்க்கையும் 'ஏன்' என்ற கேள்வியைச் சுற்றியே வளைய வருகிறது. சிறு குழந்தைகளுடனான உரையாடல்களிலும் முதலில் எதிர் கொள்வது இந்தக் கேள்வியையே. நாம் ஆர்வத்துடன் கேட்கும் மற்ற கேள்விகள் - என்ன, எங்கே, எப்பொழுது, எப்படி போன்றவை. நாம் படிக்கும் அல்லது கேள்விப்படும் செய்திகளில் இந்த வினாக்களுக்கு விடைகள் கிடைத்து விட்டால் நாம் தெரிந்து கொள்ள விரும்புவது ஓரளவு முற்றுப் பெற்று விடும். இவ்வினாக்கள் இதழியல் மற்றும் பத்திரிக்கைத் துறையின் அடிப்படைப் பாடங்களில் கற்பிக்கப்படுகின்றன.

நாம் செய்ய நினைக்கும் எந்தச் செயலிலும் இவ்வினாக்களை முன்னிலைப் படுத்தினால் நம் செயல்கள் சரியான முறையில் அமைகின்றனவா என நம்மால் உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.

வாழ்வியலுக்கு வழிகாட்டும் திருக்குறள் மேற்கூறிய அனைத்துக் கேள்விகளுக்கும் விடை தேடிய பின்பு செயல் வகையாற்ற வேண்டும் என்று குறிப்பிடுகிறது. அந்தக் குறள்,

> பொருள்கருவி காலம் வினையிடனொடு ஐந்தும்
> இருள்தீர எண்ணிச் செயல். (675)



இக்குறளில் பொருள், கருவி, காலம், வினை, இடம் இவ்வைந்தினையும் குறைவில்லாமல் அறிந்த பின்பே ஒருவன் எண்ணிய செயலை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர்.

பொருள் - என்ன, கருவி - (எதை வைத்து) எப்படி, காலம் - எப்பொழுது, வினை - ஏன், இடம் - எங்கே என்பதாக இக்குறளை அறிந்து கொள்ளலாம். 'பொருள்' என்ற சொல்லுக்கு 'செல்வம்' என்றும் விளக்கங்கள் கூறப்படுகின்றன. இங்கு நாம் செய்ய நினைக்கும் செயலையே பொருளாகக் கொண்டு சிந்தித்து செயல்பட்டால் செயல் வெற்றி உறுதியானது.

## என்ன (What)

இந்த அடிப்படைக் கேள்விகள் ஐந்திற்கும் வேறு பல அதிகாரங்களில் தனித்தனியாக வினாவும் விடையுமாக நமக்கு வழி காட்டுகிறார் வள்ளுவர். முதலில் 'என்ன' என்ற கேள்வியை எடுத்துக் கொள்வோம்.

> வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
> தீமை இலாத சொலல். (291)

இக்குறளில், உண்மை என்று கூறப்படுவது என்னவென்றால், மற்றவர்க்கு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களையே பேசுவதாகும் என்று வினாவுடம் விடையையும் அளிக்கிறார்.

## எப்பொழுது (When)

எப்பொழுது என்று காலத்தைக் குறிப்பிட்டு இன்னா செய்யாமையை வலியுறுத்திக் கூறும் குறள் இதோ:

> பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
> பிற்பகல் தாமே வரும். (319)

அடுத்தவர்க்குத் தீமை செய்தவருக்கு உடனுக்குடன் காலம் தாழ்த்தாமல் துன்பங்கள் தாமே தேடி வரும் என்று எச்சரிக்கிறார்.

## எப்படி (How)

மனிதர் எப்படி வாழ வேண்டும் என்று விளக்கும் குறள்கள் பல இருப்பினும் யாவர்க்கும் பொதுவாய் அனைவரும் அறிந்து நடக்க வேண்டிய முக்கியமான வாழ்க்கை முறை வரும் குறளில் தெளிவாகக் குறிப்பிடப் படுகிறது:

> பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
> சுருக்கத்து வேண்டும் உயர்வு.(963)

செல்வம் பெருகி உயர்ந்த நிலை வரும் போது அடக்கமும், அந்நிலை மாறும்போது உயர்ந்த மான உணர்வு வேண்டும் எனத் தெளிவுறுத்துகிறார் திருவள்ளுவர்.

## எங்கே (Where)

எங்கே என்பதைக் குறிக்கும்படி இடம் பற்றிய குறளடிகளில் ஒன்று.

> தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்
> இடங்கண்ட பின்அல் லது. (491)

நாம் ஈடுபடும் செயல் ஒன்றும் பெரிதல்ல என்று இகழ்ச்சியாகக் கருதாமல், முற்றும் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்த பின் அச்செயலைத் தொடங்க வேண்டும் என, தகுந்த இடத்தேர்வின் தேவையைக் குறிப்பிடுகிறது இக்குறள்.

- In full time in real estate business for over 17 years
- have sold over 150 homes during last seventeen years
- Bay area resident for over 30 years. Lived in Fremont for over 20 years
- priority to take care of clients' interests
- commitment to provide the excellent service to clients
- the best negotiation
- explaination about the home buying and selling process completely
- fully at site for clients from the beginning to the end of the transaction to make the home buying and/or selling easy, simple and stress free
- always connected with clients after the completion of the transaction
- available to clients in case they need any help and build up long term relations and achieve win win situation

BUY
TRUSTWORTHY REALTOR
SELL

"Sudhir was our Realtor when we sold our first home in 2004. We were very happy since we got the price and the terms we intended and the entire process was very smooth. We also bought 2 homes through Sudhir; first in 2004 and the second in 2012. We experienced quality service with Sudhir's complete focus and attention to our goals and requirements. Sudhir can simplify the home buying process by removing roadblock, resolving conflicts with the opposite party and continue to put his best efforts with enthusiasm and perseverance until the desired results are achieved. We referred Sudhir to some of our friends and colleagues and have only heard good things about him. We will continue to refer Sudhir to our friends, relatives and colleagues who are looking to buy or sell properties in Fremont and beyond."

*- Rajeev and RatikaVerma*

LEGACY
REAL ESTATE
& ASSOCIATES



**SUDHIR GUPTA - Realtor**

( DRE # 01290621) 510-552-4018 Sudhir1gupta@gmail.com Sudhirgupta.Legacyrea.com

Legacy Real Estate and Associates, 41111 Mission Blvd., Fremont CA 94539




ஏன் (Why)

முடிவாக, துவக்கத்தில் கேட்ட கேள்விக்கு நிறைய இடங்களில் குறள் வரிகளில் விடை கிடைக்கிறது. ஆனால் சில குறளடிகளில் வள்ளுவரே ஏனென்ற கேள்வி கேட்டு, பின்பு பதிலும் அளிக்கிறார். அவற்றுள் ஒன்று தான் இக்குறள்.

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. (99)

இக்குறளில் 'எவன்கொலோ' என்பதை 'ஏன்' என்ற வினாவாகப் பயன் படுத்தியுள்ளார் வள்ளுவர்.. இனிய சொற்கள் இன்பத்தையே வழங்கும் என்பதை உணர்ந்தவன் ஏன் வன்சொற்களைப் பயன்படுத்துகிறான்?

வினாவும் விடையுமான திருக்குறள் வரிகளில் மனித வாழ்வியலையே வகுத்துக் காட்டிய திருவள்ளுவரின் மேன்மைதான் என்னே!

---


ரேவதி கணக்குத் தணிக்கை அதிகாரியாக வங்கித் துறையில் பணியாற்றியவர். ''எமக்குத் தொழில் எழுத்து" என்ற பாரதியின் வார்த்தையை மனதில் சுமந்து, விருப்ப ஓய்வுக்குப் பின், தணிக்கை துறை மற்றும் இசைத்துறையில் எழுதுவதை முதன்மையாக செய்து வருகிறார். இளம் வயதிலேயே சிறார்களை எழுத்து மற்றும் பத்திரிக்கை துறையில் பழக்குவிக்கும் விதமாக Yocee.in என்னும் வலைத்தளம் ஒன்றை ஆரம்பித்து பள்ளி மாணாக்கர்களுக்காக நடத்திவருகிறார். இதழியல் துறையில் முதுகலைப் பெற்ற இவர் இதழியல் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்.


## குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்




Adiral_premkumar
Grade KG, Age 5,
Fremont, CA




Akshatha Sivadharsan
Grade 1 , Age 6,
Union City, CA










Dhanyaa Satheeshkumar
Grade 2, Age 7,
Sunnyvale, CA






Balaji Saravanagupta
Grade 6, Age 11 ,
San Ramon, CA






Kaushik Venkatanarayanan,
Grade 2, Age 8,
Livermore, CA

# தமிழ் மொழிக்கு வள்ளுவரின் வார்த்தைக் கொடை

- முனைவர் பா.ரா.சுப்பிரமணியன்

### ஆங்கில மொழிக்கு ஷேக்ஸ்பியரின் பங்களிப்பு

முன்பு ஒருமுறை கணினியில் ஆங்கில இலக்கிய இணையதளங்களைத் தொட்டுத் தொட்டுத் தாவிக்கொண்டிருந்தபோது ஓர் ஆய்வுநூல் என் கவனத்தை ஈர்த்தது. Coined by Shakespeare: Words and meanings first penned down by the bard என்பது அந்த ஆய்வுநூல். "ஷேக்ஸ்பியரால் உருவாக்கப்பட்டவை : கவிஞர் முதன்முதலாகப் படைத்தளித்த சொற்களும் பொருள்களும்". இந்நூலின் ஆசிரியர் இருவர் : Jeffrey McQuain and Stanely Malless (Merriam-Webster Inc. USA, 1998). இந்த ஆய்வுநூல் ஷேக்ஸ்பியர் உருவாக்கிய தனிச்சொற்களை மட்டும் கூறுகிறது, அவர் உருவாக்கிய சொற்கள் 1500 ஆக இருக்கலாம் எனவும் குறிப்பிடுகிறது. அவற்றுள் பல சொற்கள் இன்றைய ஆங்கிலத்திலும் வழங்கிவருகின்றன (bedroom, label, obscene, exposure) என்பதைப் படித்தபோது வள்ளுவர் புதிதாகப் படைத்தளித்த சொற்களைக் கண்டறியும் ஆவல் உண்டாயிற்று.

### புதிய சொற்களை அடையாளம் காணும் முறை

வள்ளுவர் தமிழுக்கு அறிமுகம் செய்துவைத்த சொற்களைத் தெரிந்துகொள்ளவேண்டுமானால் குறளில் உள்ள சொற்களை, குறளுக்கு முந்தைய சங்க இலக்கியச் சொற்களோடு ஒப்பிடவேண்டும். சங்க இலக்கியங்களில் இடம்பெறாமல் குறள்பாக்களில் மட்டும் இடம்பெற்று இருக்கும் சொற்கள் வள்ளுவர் வழியாகத் தமிழுக்கு அறிமுகமானவை எனக் கொள்ளலாம்.

திருக்குறளில் இருக்கும் சொல் சங்க இலக்கியத்தில் இருக்கிறதா என்று அறியும் 'சொல் அளவு ஒப்பீட்டை' ஓரளவு எளிதாகச் செய்யமுடிந்தது.

சங்கஇலக்கியங்களில் காணப்படாத திருக்குறள் சொற்களை நமது வசதிக்காக இருவகையாகப் பிரித்துப் பார்க்கலாம். அவை வினைச்சொற்கள், வினைச்சொற்கள் அல்லாத பிறசொற்கள்.

### வினைச்சொற்கள்

சங்க இலக்கியங்களில் இல்லாத, வள்ளுவர் அறிமுகப்படுத்திய வினைச்சொற்கள் பதினாறு.

அவை, 1. அவ்வி-த்தல் (167,169), 2. இவறு-தல் (432, 437, 1002, 1003) 3. உஞற்று-தல் (604, 607, 620), 4, ஐயப்படு-தல் (702, 958), 5. சிமிழ்-த்தல் (274), 6, சிறக்கணி-த்தல் (1095), 7. சினைத்தல் (1203), 8, தறு-தல் (1023), 9, துருவு-தல் (929), 10, நயப்பி-த்தல் (1189, 1190), 11. நுது-த்தல் (1148), 12. பீழி-த்தல் (843, 1217)இ 13. பொச்சா-த்தல் (199, 246, 533, 537), 14. மேற்செல்லுதல் (335, 784), 15, வெயர்-த்தல் (1328), 16, வேர்-த்தல் (487).



இப்பதினாறனுள், ஐயப்படு-தல், துருவு-தல், மேற்செல்(லு)-தல், வெயர்-த்தல், வேர்-த்தல் ஆகிய 5 வினைச்சொற்கள் இன்றும் வழக்கில் உள்ளன. கடைசி இரு வினைச்சொற்களும் சொல்வடிவத் தொடர்புடையவை. வள்ளுவர் 'நுதல் வியர்ப்ப' என்றும் 'உள் வேர்ப்பர்' என்றும் ஒரு வினையடியை இருவேறு வடிவங்களில் பயன்படுத்துகிறார்.

### வினைச்சொற்கள் அல்லாத பிறசொற்கள்

வினைச்சொற்கள் நீங்கலாக உள்ள பிறசொற்களைப் பார்க்கலாம். பெயர்ச்சொற்கள் உள்ளிட்ட 83 சொற்கள், சங்க இலக்கியத்தில் காணப்பெறாதவை, குறளில் வந்துள்ளன. இன்று மிகவும் புழக்கத்தில் உள்ள சில சொற்கள் வள்ளுவர் நமக்கு வழங்கியவை.

குடும்பம் (1029), இருட்டு (913), தோல்வி (986), நாகரிகம் (580), பிற்பகல் (319), மந்திரி (639) ஆகியவை வள்ளுவர் தந்தவை. (கண்ணின்) கருமணி (1123), கள்ளம் (1184, 1275), சிற்றின்பம் (173), திண்மை (54, 743, 988), மாறுபாடு (945), மேன்மை (137) ஆகியவையும் வள்ளுவத்தால் நமக்குக் கிடைத்தவை. எங்ஙனம் (251), மேன்மேல் (368) போன்ற வினையடைகளையும் வள்ளுவரே தமிழுக்குத் தந்தார்.

ஆசாரம் (1075), சூது (931), தானம் (19, 295), பாக்கியம் (1141), பாவம் (146), பாவி (168, 1042) ஆகியவையும் வள்ளுவர் அறிமுகப்படுத்திய சொற்களே. அவர் வழங்கிய 'விக்குள்' (335) இன்று 'விக்கல்' என்ற வடிவில் வழங்குகிறது.

> நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
> மேற்சென்று செய்யப் படும். (335)

வள்ளுவர் தந்த சில சொற்களை வட்டார வழக்குகளில் காண்கிறோம். அங்கணம் (720), ஊருணி (215),

# TAXCHAMPION INC.

**Take The Head Ache Out Of Taxes**



Lalitha Manohari
MBA Finance
Tax Preparer / Sr. Loan Officer
NMLS #333611

- Individual and Corporate Taxes
- S & C, Corporation Tax Return
- 1031 Exchange Tax Filing
- LLC & Partnership Tax Return
- Set-up Non-Profit Organizations
- IRS Audit Representation
- Electronic Filing
- Set-up S & C, Corporation & LLC


- ***Serving Bay Area for over 15 years***
- ***Locations in Union City and Milpitas***

**info@taxchampion.com | www.taxchampion.com**

# REALTY CHAMPION INC.

***One Stop Shop For All Your Real Estate Needs***

**BUYING ◆ SELLING ◆ INVESTMENT**



**Gowthaman Gurusamy**
Realtor /
LIC #01905323
**925.594.2990**

Zillow®
5-STAR PREMIER AGENT

For more Reviews
**www.zillow.com/profile/higowtham/#reviews**

**www.realtychampion.com**
**gowtham@realtychampion.com**

2016 Bay-East Association of Realtors **'PINNACLE AWARD WINNER'**

**CALL GOWTHAM TO GET 50% COMMISSION CREDIT BACK WHEN YOU BUY A BUILDER HOME**

# CHAMPION HOMELOANS

**One Stop Shop For All Your Home Loan Needs**

- *Premium Customer Service.*
- *Smooth and Hassle-Free Loan Process.*
- *100% success rate in closing Loans for our pre-approved Clients.*
- *Best Rates for the best loan program that fits your needs.*

**Lalitha@championhomeloans.com | www.championhomeloans.com**

**Call: 510.441.2583 ◆ 408.262.6267**

Corporate Office: 372 Fairview Way, Milpitas, CA-95035
Branch Office: 4 Union Square, Union City, CA-94587

(கொல்லன்) பட்டடை (821) (இன்று பட்டறை என்று மிகுதியாக அறியப்படுவது) ஆகியவை தென்மாவட்ட மொழிகளில் வழங்கிவருபவை.

வள்ளுவர் அறிமுகப்படுத்தி, இன்றும் வழக்கில் உள்ள மற்றொரு சொல் 'தூக்கம்'(668). ஆனால் அந்தச் சொல்லை 'உறக்கம்' என்னும் பொருளில் வழங்காமல், 'சோர்வு' என்னும் பொருளில் பயன்படுத்திருக்கிறார்.

வள்ளுவர் அறிமுகப்படுத்திய இரு சொற்கள் இக்கால ஆட்சித் தமிழ்க் கலைச்சொற்களில் இடம்பெற்றுவிட்டன. அவை. 'அமைச்சு'(381), 'ஆயம்' (933).

அனிச்சம் என்பது சங்க இலக்கியத்தில் குறிஞ் சிப்பாட்டிலும் (62), கலித்தொகையிலும் (91:1) வழங்கியிருக்கும் சொல்; ஆயினும், வள்ளுவர் இந்தச் சொல் குறிப்பிடும் பூ மென்மைத் தன்மை உடையது என நான்கு குறள்களில் (90, 1111, 1115, 1120) கூறி அந்தப் பூவிற்கு அமரத்தன்மை வழங்கிவிட்டார்.

மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. (90)

நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள். (1111)

அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுகப்பிற்கு
நல்ல படாஅ பறை. (1115)

அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கு நெருஞ்சிப் பழம்.(1120)

பெண்ணைக் குறிப்பிட ஏழு தொகைச் சொற்களை வள்ளுவர் வழங்கியிருக்கிறார். அணியிழை (1102), ஆய்தொடி (911), இலங்கிழை (1262), ஒண்டொடி (1101), ஒண்ணுதல் (1240), ஒளியிழை (1329), மாணிழை (1114) இவை ஏழும் பெண்ணைக் குறிப்பிடும் சொற்களாகச் சங்க இலக்கியத்தில் வரக்காணோம்.

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து.(1102)

அன்பின் விழையார் பொருள்விழையும்
ஆய்தொடியார்
இன்சொல் இழுக்குத் தரும்.(911)

இலங்கிழாய் இன்று மறப்பின்என் தோள்மேல்
கலங்கழியும் காரிகை நீத்து.(1262)

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும்
ஐம்புலனும்
ஒண்தொடி கண்ணே உள.(1101)

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.(1240)

ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ இரா.(1329)

காணின் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று.(1114)

'பாடு' இணைந்த சொற்கள் சிலவற்றை வள்ளுவர் அறிமுகம் செய்திருக்கிறார். ஊறுபாடு (945), ஐயப்பாடு (587), திறப்பாடு (640), தொடர்ப்பாடு (345), மாறுபாடு (945) ஆகிய 5 சொற்களும் வள்ளுவரால் தமிழுக்குக் கிடைத்தவை.

இதேபோன்று, மை விகுதியை இறுதியில் உடைய சொற்களாகிய அஞ்சாமை(382, 428, 497), அடங்காமை (121), இகழாமை (891, 953) போன்ற பெயர்கள் பலவற்றை (ஏறத்தாழ 40) வள்ளுவர் அறிமுகப்படுத்தியிருக்கிறார். அவற்றுள் சில பலமுறை வந்துள்ளன. எடுத்துக்காட்டாக, செய்யாமை 9 முறை (297, 311, 312, 317, 655, 852). அவர் எடுத்துக்கொண்ட அற-ஒழுக்கக் கோட்பாடுகளுக்கு மிகவும் தேவையான சொற்கள் அவை.

சங்க இலக்கியச் சொற்களோடு ஒப்பிட்டதனால் திருக்குறளில் இடம்பெற்றிருக்கும் புதிய சொற்களை அறிய முடிந்தது. ஒரு நூறு சொற்கள் தமிழுக்கு வள்ளுவர் அளித்தவை. அவற்றில் சில சொற்கள் மொழியில் நிலைகொண்டு இன்றளவும் வழங்கி வருகின்றன.

---

பா(வூர்சத்திரம்) ரா(ஜகோபால்) சுப்பிரமணியன் (20.12.1941) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார் (1962); கேரளப் பல்கலைக்கழகத்து மொழியியல் துறையில் பேரா. வ.ஐ. சுப்பிரமணியம் மேற்பார்வையில் தமிழக நாட்டுப்புறப் பாடல்களில் ஆய்வுசெய்து முனைவர் பட்டம் பெற்றார் (1970).

சிந்து வெளி நாகரிக எழுத்துக்களை ஆய்வுசெய்த அஸ்கோ பர்போலாவிற்குத் தமிழில் உதவிபுரிய கோபன்ஹேகன் நகரில் ஸ்காந்திநேவிய ஆசிய நிறுவனத்தில் ஓராண்டு (1971-72) பணிபுரிந்தார்; பின்னர் ஜெர்மனியில் கொலோன் பல்கலைக்கழக இந்தியவியல் துறையில் 12 ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார் (1972-1983); பின்னர் மூன்று ஆண்டுகள் (1983-86) தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகப் பேரகராதித் திட்டத்தில் பதிப்பாசிரியராகப் பணிசெய்தார்; 1986இல் க்ரியா வெளியீட்டு நிறுவனத்தின் தற்காலத்தமிழ் அகராதியின் முதன்மைப் பதிப்பாசிரியர். அந்த அகராதி வெளியான பின் (1992) மொழி அறக்கட்டளையில் இணைந்து தற்கால மரபுத்தொடர் அகராதி (1997), தமிழ் நடைக் கையேடு (2001), சொல்வழக்குக் கையேடு (2005) ஆகிய நூல்களுக்கும் முதன்மை பதிப்பாசிரியராக இருந்தார். வெளிநாட்டில் தமிழ்க் கற்பவர்களுக்காகத் தமிழ் உரைநடைத் தொகுப்பு (Contemporary Tamil Prose Reader) ஒன்றும் உருவாக்கி வெளியிட்டிருக்கிறார் (2008). தற்காலத் தமிழ்ச் சொற்சேர்க்கை அகராதியின் பதிப்பாசிரியராக இருந்து 2016இல் வெளியிட்டிருக்கிறார். இவரது கட்டுரைகளின் தொகுப்பு 'சொல்வலை வேட்டுவன்' என்னும் தலைப்பில் வெளியாகியுள்ளது (2009). தமிழ்ச் சொல்வளம் - தொகுதி 1 - பூவுலகு (2018) (Treasure of Tamil Words - Sangam classics - Volume 1, The Earth), தமிழ்ச் சொல்வளம் - தொகுதி 2 உணவு, உடை, அணிகலன் (2019) (Treasure of Tamil Words - Sangam classics - Volume 2, Food, Clothes, Ornament) ஆகிய நூல்களையும் உருவாக்கியிருக்கிறார். மொழி அறக்கட்டளை செயலராக இருந்து தமிழ்ப் பணியாற்றி வருகிறார்.


INDIAN RESTAURANT
DC
HALAL I-TASTE
DOSA & CURRY
RESTAURANT
DOSA & CURRY
Vegetarian Restaurant
VEGETARIAN
CATERING:
Onsite Dosa
Corporate Catering
All Events
Birthday party
Get-together
House-warming ceremony
39742, Cedar Blvd,
Newark, CA 94560
(510) 573-4056
dosaandcurry@gmail.com
Vegetarian Restaurant
www.dosaandcurry.com

# நாடு, அதை நாடு.

நாடு, அதை நாடு. அதை நாடாவிட்டால் ஏது வீடு ? சொர்க்கம் என்பது நமக்கு சுத்தம் உள்ள வீடு தான். நாடுவிட்டு நாடுவந்த நாம் உளமாரப் பேசுவோம் பிறந்த நாட்டின் புகழை. புகழ்ந்து போற்றுவோம் புகுந்த நாட்டின் பெருமைதனை.

யானை கட்டிப் போரடிக்கும் அளவுக்குக் குறைவில்லாத விளைபொருளும், 'கதி'யாம் கம்பரும் திருவள்ளுவரும் என்றொரு வரிசையில் இளங்கோவும் பாரதியும் தக்கஅறிஞராய் கேடில்லாத செல்வம் உடையவராய் மாசாத்து வாணிகன் மகனாம் கோவலனும் கூடிப் பொருந்திய நாடே நாடாம் என்று நம் நாட்டை வள்ளுவப் பெருந்தகை சீர்மிகு எழுசீர்களில் வாழ்த்துகிறார்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு (731)

கடும் முயற்சி செய்து தேடாமலேயே இயற்கையாக வளத்தைத் தரும் நாடுகளை சிறந்த நாடுகள் என்றும், அதைத் தேடி முயன்றதால் வளம் தரும் நாடுகள் சிறந்த நாடுகள் அல்ல என்றும் எடுத்துரைக்கிறார் தெய்வப்புலவர், எதுகைமோனையாய்.

நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு (739)



இந்நாட்டில் உள்ள வற்றாத வளங்களைக் கண்கூடாகவே நாமறிவோம். ஆனால் நாம் பிறந்த நாடு இதற்குச் சிறிதும் சளைத்ததன்று என்பதைத் தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்கள் பின்வரும் செய்யுளால் புகழ்ந்துள்ளார்.

மலைகளிலே உயர்மலையை
மகிழ்ந்தணியு நாடு
மாநதியுள் வானதியே மல்குதிரு நாடு
உலகில்விளை பொருளெல்லாம் உதிக்கின்ற நாடு
ஒண்தொழிலும் வாணிகமும் ஓங்கியசீர் நாடு
கலைகளொடு மறைமுடியைக் கண்டதவ நாடு
கடவுளருட் கோயில்களே காட்சியளி நாடு
பலசமய உண்மையெலாம் பரந்தொளிரு நாடு
பழமைமிகு புகழ்பெருகு பாரதநன் னாடே!

பளபள வரிசையில் நாடுகள் பல இருக்க, இந்நாட்டை நாம் நாடினோம் வள்ளுவர் வாய்மொழிக்கிணங்க. மிக்க பொருள்வளம் உடையதாய், எல்லோரும்விரும்பத்தக்கதாய், கேடு இல்லாததாய் மிகுதியான விளைபொருள் தருவதே நாடாகும் என்று அசை, சீர் வாய்பாட்டால் பின்வரும் குறளால் அளவிடுகிறார்.

பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால்
ஆற்ற விளைவது நாடு (732)



நோய் இல்லாதிருத்தல், செல்வம், விளைபொருள் வளம், இன்ப வாழ்வு, நல்ல காவல் இந்த ஐந்தும் நாட்டிற்கு அழகு என்று நம் செந்நாப்போதார் மெச்சுகிறார். வியத்தகு விஞ்ஞானமே கலைகளாய், இந்நாட்டில் நாம் காணும் அழகென்ன! தேடும் நலமென்ன! அதைச் சொல்ல மொழி என்றால் வள்ளுவம் தவிர வேறில்லையே! அந்த அய்யனின் வாரிசுகளாம் நாம் அவரது மொழிதலின்படியே இந்த அழகுமிகு நாட்டை நாடி வந்திருக்கிறோம் என்பதில் பெருமை கொள்வோம்.

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. (738)


தோண்டிய அளவுக்கு ஏற்ப நீர் ஊறும் மணற்கேணிகளும், விவசாயத்திற்கு ஏதுவாக மாதம் மும்மாரியும், வானுயர்ந்த பாதுகாப்பு அரணாக விளங்கும் மலைகளும், கோடைக்காலத்தில் அதிலிருந்து வரும் நீர்வளமும், ஒரு மனிதனின் அவயவங்கள் போல ஒரு நாட்டின் இன்றியமையா உறுப்புகளாய்த் திகழ்கின்றன என்று பொய்யிற்புலவர் சுட்டிக்காட்டுகிறார், அருமையாய் இரு வரிகளில்.

இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு. (737)

விரிகுடா குறள்கூடம் நாடி, இந்நாட்டில் வாழும் நம்நாட்டு மக்களின் குணமும் நலனும் நாடுவோம்.

* * *


FINEST QUALITY PRODUCTS
Jay Bharat
Jay Bharat
Jay Bharat Restaurant – Indian Vegetarian Cuisine
"Home of the Gujarati and Kathiyawadi Thali"
We Specialize in Gujarati cuisine & popular Indian street foods
We carry a large variety of sweets and namkeens
Let us cater your next social or business event
www.jaybharat.com
Voted Best Indian Restaurant & Best Vegetarian Restaurant by Newark Connection 2015 - 2018.
2015 WINNER BEST OF NEWARK
2017 WINNER BEST OF NEWARK
2016 WINNER BEST OF NEWARK
2018 WINNER BEST OF NEWARK
Northern California
39203 Cedar Blvd, Newark, CA 94560
510-494-9727
Southern California
18701 Pioneer Blvd, Artesia, CA 90701
562-924-3310


Truthful
Successful
Real Estate Resource
BUY or SELL
KUMAR NALLUSAMY
INTERO
REAL ESTATE SERVICES
Independently Owned and Operated
KUMAR NALLUSAMY
Broker-Associate
510.364.8016
NallusamyKumar@gmail.com
LUXURY PORTFOLIO INTERNATIONAL
LEADING REAL ESTATE COMPANIES OF THE WORLD
510.364.8016
NallusamyKumar@gmail.com

# புலால் மறுத்தல்

*- அழகுதன்யா சீனிவாசன், வயது 6*

ஒரு ஊரில் ஒரு பனிக்கரடி வாழ்ந்துச்சாம் பனிமலையில். அப்ப வந்து ஒரு மனுஷன் வந்திருந்தானாம் அவன் வந்து சாப்பாடு கண்டுபிடிக்க வந்திருந்தானாம். ஏன்னா அவன் ஊரில் எல்லா காய்கறியும் காய்ஞ்சு போயிருந்துச்சாம் பனிக்காலத்தினால். அதனால் அவன் உறவினர் வீட்ல இருந்து வந்திருந்தானாம் பனிமலைக்கு. பனிக்கரடியை வேட்டையாடி எடுத்துத்துட்டு போய் எல்லாரும் சேர்ந்து சாப்பிடலாம்னு நினைச்சு வந்திருந்தானாம். அவனை பார்த்த உடனே பனிக்கரடி அவன் தன்னை வேட்டையாட வந்திருக்கானு தெரிஞ்சுக்கிச்சாம். அது உடனே அவன் கிட்ட இருந்து தப்பிக்கணும்னு நினைச்சு கோபமா வேகமா தண்ணிக்குள்ள குதிச்சுருச்சாம். ஆனால் அது தன்னோட பாப்பா பனிக்கரடியை மறந்துட்டு தண்ணிக்குள்ள குதிச்சுருச்சு. குதிச்ச வேகத்திலே மறுபடி தண்ணில இருந்து வெளிய வந்து பாப்பா பனிக்கரடியை கூட்டிகிட்டு தண்ணிக்குள்ள போய்டுச்சாம்.

பனிக்கரடி தன்னோட பாப்பா பனிக்கரடியை கூப்பிட்டுக்கிட்டு அவன் கிட்ட இருந்து தப்பிக்கிறதுக்காக ரொம்ப வேகமா நீந்தி போச்சாம். அதனால் அவனால் பனிக்கரடியையும் அதனோட குட்டியையும் வேட்டையாட முடியாம போச்சு. அதனால் அவன் ஏமாந்து போய் வீட்டுக்கு கிளம்பினான் பனிமலையில்



இருந்து. ஆனால் அவன் அதோட சாப்பாடு தேடுற முயற்சியை விடலை. அவன் இனிமேல் நம்ம வேட்டையாடி மாமிசம் சாப்பிட வேண்டாம்னு நினைச்சு காய் கனிகளை தேடி சமைச்சு சாப்பிடலாம்னு நினைச்சு ஒரு தீவுக்கு போனானாம். அவன் அந்த தீவில் காய்கறிகள் கண்டு பிடிச்சான் அதனோட அவனுக்கு ஒரு நகையும் கிடைச்சுச்சு அந்த தீவில். அப்புறம் அவன் அந்த காய்கறிகளையும் நகையையும் வீட்டுக்கு எடுத்துட்டு போனான். காய்கறிகளை சமைச்சு மகிழ்ச்சியாக குடும்பத்தோட சேர்ந்து சாப்பிட்டான். இந்த கதையோட நீதி என்னன்னா உயிர் விலங்குகளை துன்புறுத்தி வேட்டையாடி சாப்பிடக்கூடாது. இந்த கருத்தை தான் திருவள்ளுவர் புலால் மறுத்தல் அதிகாரத்தில் சொல்லிருக்காரு.

“அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் தினல்” (குறள் - 254)

---


Quick Service

DOSA HUT
its home treat!

DOSA HUT
Authentic Vegetarian Restaurant





Onsite Catering
Daily Breakfast at 7 AM

South Indian Specialities
Soups, Breads, Starters, Kids Corner,
Dosa & Uthappam Junction, Combo Special,
Rice Varieties, Dessert Specials, Beverages.

39180 Paseo Padre Pkwy, Fremont, CA 94538
(510) 796 - 3672
www.dosahut.us




# Himalini Jayaraman

Your Trusted & Dedicated REALTOR®

408.204.7863

## Assisting with all of your Real Estate needs

1. A trustworthy local in the neighborhood
2. With innovative marketing, create greater exposure for your home
3. Assistance with lender referrals and contractor referrals for renovation
4. Aggressive counter negotiations on your behalf
5. Home preparation and white glove service selling your home

INTERO

DRE#02016185

## SUCCESS IS IN YOUR HANDS NOW.

## LET'S TALK

(408) 204 7863

HimaliniJ@Intero.com

www.HimaliniRealtor.com

# இரக்க உணர்வு

- தேவி நாகப்பன்



அருள் நெஞ்சம் உடையவரை துன்பம் அண்டுவதில்லை. இரக்கமும், கருணையும் உடையவர்கள், நீண்ட நாட்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை கீழ்காணும் திருக்குறள் சொல்கிறது.

"அல்லல் அருளாள்வார்க்கு இல்லை வழிவழங்கும்
மல்லல் மாஞாலம் கரி." (245)

பொதுவாக இரக்கம் கருணை என்பது ஒவ்வொரு மனிதருக்கும் இருக்கவேண்டிய பண்பாகும். அமெரிக்காவின் ஹாட்வேர்ட் பல்கலைக்கழக ஆட்சியாளர்கள் ஆணும் பெண்ணுமாய் குழந்தைகளை ஒரு அரங்கத்தில் அமர வைத்தனர். ஹிட்லரின் சண்டைக் காட்சிகள் ஒரு படம், தோட்டக்கலை பற்றிய ஒரு படம், அன்னை தெரசா செய்யும் பணிகள் பற்றிய ஒரு படம் என 3 படங்களை அரங்கத்தில் காட்டினார்களாம்.

திரைப்படம் முடிந்தபின் அந்த குழந்தைகளின் உமிழ்நீரை பரிசோதித்து உள்ளனர். முன்பு பார்த்த முதல் இரண்டு படங்களை விட அன்னை தெரசா பற்றிய படத்தை பார்த்த அவர்களின் உமிழ்நீரில் நோய் எதிர்ப்பு அணுக்கள் அதிகமாக உற்பத்தி ஆகி இருப்பது தெரிய வந்ததாம் அதாவது இரக்க உணர்வு அதிகரிக்கையில் உமிழ்நீரில் நோய் எதிர்ப்பு அணுக்கள் அதிகம் உற்பத்தி ஆகும் என்ற உண்மை இதன் மூலம் தெரிய வருகிறது. இந்த அணுக்கள் தான் நம்முடைய ஆயுளை நீடிக்க செய்யக் கூடியதாகும். திருவள்ளுவரும் இதைத்தான் அல்லல் அருள் ஆள்வார்க்கு இல்லை என்ற குறள் மூலம் உணர்த்துகிறார்.

"அருள் உடையவராக வாழ்பவர்களுக்கு ஒரு நாளும் துன்பம் இல்லை இன்பமே எந்நாளும். காற்று இயங்குகின்ற வளம் பொருந்திய பெரிய உலகத்தில் வாழ்வோரே இதற்கு சான்று" என்பதே குறளின் பொருள்.

ஆகவே இரக்க உணர்வு என்பது மனம் தொடர்பானது மட்டுமல்ல உயிர் தொடர்பானதும் தான். அரக்க குணம் தவிர்த்து இரக்கமுடன் வாழ்வோம். இன்பங்கள் பெறுவோம்.


NEW TRAINING BATCHES
Every Month 2016

THE BEST PROFESSIONALS HAVE NEVER STOPPED LEARNING

OMEGA SOLUTIONS INC.
Innovations Never End

1900 LAFAYETTE ST,#245
SANTA CLARA
CA 95050

ZETA METRICS

1900 LAFAYETTE ST, #230
SANTA CLARA
CA 95050



*Omega Solutions is a Full IT Service Provider. It also helps professionals with upgrading their skills through in house training thus enabling them to expand their skill set and marketability. We provide training and placement services for technologies in CRM using Salesforce, Big Data using Hadoop, Data Analysis using SQL and Advanced SQL and Data Warehousing using Oracle Financial.*

***Contact us at: 408-988-8448***
***hr@omegasolutioninc.com***

*Zeta Metrics has a product focused approach as its growth model. The Data and Healthcare analytics divisions are driven by innovation and creativity to succeed. Our healthcare analytics platform provides doctors and patients ability to log, monitor and tune patients' dosages based on their symptoms.*

***Contact us at: 408 -791-3551***
***hr@ zetametrics.com***

We both are an E-Verify Company

salesforce Google accenture High performance. Delivered. Volkswagen maxim integrated ORACLE Gold Partner

# ஊருக்கு நல்லது சொல்லும் இரு வரிக் காவியம்

- பி. மணிகண்டன்

நண்பர்கள் இல்லாத வாழ்க்கை நரம்பற்ற வீணைக்குச் சமம். ஆழமான அன்பே அழுத்தமான நட்புக்கு அணிகலன் என்ற வரிகளுக்கு ஏற்ப அன்பின் நேர்த்தியோடும், நட்பின் உரிமையோடும் நமது விரிகுடாக் குறள் கூடத்தின் வாயிலாக வெளியிடவுள்ள மலருக்கு திருக்குறள் குறித்து கட்டுரை கேட்டது மிக்க மகிழ்ச்சி.

கடல் கடந்து சென்றும் தான், தனது குடும்பம், நட்பு என்று இல்லாமல், மொழி, மரபு, மண்ணின் பெருமை, சமூக அக்கறையுடன் நாளும் செயல்படும் விரிகுடாக் குறள் கூடத்தின் உயர்ந்த பணிகள் என்றும் பெருமையுடையது, பிறர் பின்பற்றி நடக்க வேண்டியது.

அந்தவகையில், தங்கள் மலருக்கு சம்பிரதாயமாக ஒரு வாழ்த்து செய்தியை அனுப்புவதை விட, உயர்ந்த பணியை செய்யும் தங்களுக்கும், நண்பர்களுக்கும், அமைப்பை சேர்ந்த நல்ல உள்ளங்களுக்கும் பயன்தரும் வகையில், “உலகிற்கு நல்லது சொல்லும் இருவரி காவியம் திருக்குறள்” என்கிற கட்டுரையை எளிய வகையில் தயார் செய்து அனுப்பியுள்ளேன்.

திரும்பும் இடமெல்லாம் திரண்டு நின்ற கூட்டம், வார்த்தைக்கு வார்த்தை கரவொலி, பளபளக்கும் திருவள்ளுவர், உண்மையான அன்பின் தரிசனம், ஊருக்கு முடிந்ததை ஒன்றுகூடி செயல்படும் என்கிற விரிகுடாக் குறள் கூட அன்பர்களின் அற்புத பணிக்கு இந்த மலர் ஒரு வைரக்கல்லாக அமைகிறது.

அதில் எனது கட்டுரையும் இடம் பெறுவது எனக்கு பெருமை, மகிழ்ச்சி. நன்றி.

உங்களின் ஒவ்வொரு பணி சிறக்கவும் வாழ்த்துக்கள்.

****

பகவத்கீதை இந்துக்களுக்கு மட்டுமே உரியது. குரான் இசுலாமியர்களுக்கு மட்டுமே உரியது. விவிலியம் (பைபிள்) கிருஸ்துவர்களுக்கு மட்டுமே உரியது. ஆனால், திருக்குறளோ உலக மக்கள் அனைவருக்கும் உரிய பொதுமறை என்பது உண்மையிலும் உண்மை!

எழுதுகோல் தெய்வம், எழுத்தும் தெய்வம் என்ற மகாகவி சுப்பிரமணிய பாரதி தனது பாடல் வரிகளில் “யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப்போல், பூமிதனில் யாங்கணுமே பிறந்தது இல்லை என்று பதிவு செய்துள்ளார். அப்படி என்றால் முதல் இடம் கம்பன், இரண்டாம் இடம் திருவள்ளுவர், மூன்றாம் இடம் இளங்கோ என்று வரிசைப்படுத்தினாரோ என்று பார்த்தபோது, நம் தமிழ் முன்னோர்களின் செயல்கள் எனக்கு நினைவுக்கு வந்தது.

தமிழர்கள் எதையும் எடைபோடுகின்றபோது தராசு தட்டில் வைத்து அதை எடைபோட்டு அளிப்பார்கள். அதில் எடை சரியாக இருக்கிறதா என்பதை காட்டுவது நடுவில் உள்ள தாரசு முள். அதுபோல, கம்பனையும், இளங்கோவையும் சரிபார்க்கும் முள்ளாக பாரதி வள்ளுவனை நடுவில் வைத்து உலகிற்கு பெருமை சேர்த்துள்ளான். 133 அதிகாரம் அதிகாரத்திற்கு



10 குறள் என்று 1330 குறள் வாயிலாக வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் நமக்கு படம் பிடித்து பாடம் நடத்திய வாழ்வியல் ஆசிரியர் தெய்வப்புலவன் திருவள்ளுவர் என்பது தான் உண்மை.

அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என்று வரிசைப்படுத்தி இரண்டு வரி காவியத்தின் வழியாக பறந்து விரிந்த உலகின் அனைத்து செய்திகளையும் தந்த வள்ளுவர் ஓர் மகாகவி. இல்வாழ்க்கை, ஈகை, உழவு, கல்வி, கல்லாமை, காலமறிதல், நட்பு, கூடா நட்பு, கேள்வி, தவம், செய்நன்றி அறிதல், நாடு, புகழ், மக்கட்பேறு, வாழ்மை, வழிபாடு, விருந்தோம்பல் என்று மானுட சமூகத்திற்கு வேண்டியது அனைத்தும் உள்ள ஓர் அறநூல் திருக்குறள்.

கனவுகள் ஈடேற
உள்ளங்களும், இல்லங்களும் மகிழ்ச்சியுற,
ஓர் தேசம் உயர்வடைய
இல்லந்தோறும் இருக்க வேண்டிய
வாழ்வியல் கருவூலம் நம் திருக்குறள்.

### கல்வி:

ஒரு நாட்டின் எதிர்காலமே வகுப்பறையில்தான் உருவாக்கப் படுகிறது. கல்வியின் நோக்கம் அறநீதி கொள்வது மட்டும் அல்ல, நாம் தெளிவு பெறுவதும் கல்வியில்தான்.

ஒரு பிறப்பிலே கற்ற கல்வியானது ஒருவனுக்கு ஏழு பிறப்புகளிலும் உதவி செய்யும் தன்மை உடையது என்பதை மிக நேர்த்தியாக சொல்லியுள்ளார்.

குறள்: ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவருக்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

### நட்பு:

ஒரு மனிதனின் உடை அதாவது அவன் உடுத்தியிருக்கும் ஆடை அவிழ்ந்ததும் அவன் உடல் உறுப்பில் உள்ள கையானது எப்படி தானாகச் சென்று அதை சரிசெய்து மானத்தைக் காக்கிறதோ, அதைப்போல துன்பம் என்று வந்தால் நட்பு தானாக முன்வந்து அதை சரி செய்வதே நட்பின் இலக்கணம் என்பதை உலக வரலாற்றில் இதுவரை யாரும் சொல்ல முடியாத வகையில் பதிவு செய்த மரபுகளின் ரட்சகன் நமது திருவள்ளுவர்.

குறள்: உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு.

### ஈகை:

அறம் செய்ய விரும்பு என்றார் ஔவை. நீதிநூல்களோ, துயருற்றவனைத்தேடி இடது கைக்குத் தெரியாமல், வலது

கையால் தானம் அளிக்ககிறனோ, அந்த ஈரமுள்ள மனிதனே உலகில் உயர்ந்தவன் என்றது. வள்ளுவரோ இரண்டே வரியில் சொன்னார் ஈகை என்பது வரியவருக்கு (ஏழைக்கு) இல்லாதவருக்கு ஒரு பொருளை இருப்பவன் உடனே கொடுப்பதே சிறந்தது என்றார்.

குறள்: வறியார்க்கு ஒன்றுஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து.

மனிதனின் எண்ணம்:

குறள்: வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு

தண்ணீரின் உயரம் தான் தாமரையின் உயரம். அதுபோல, நமது மனித எண்ணத்தின் உயரம்தான் நமது உயரம்.

அறம்:

அறம்பற்றி பேச வந்த வள்ளுவர் நம்மை அறைந்தது போல, சொல்லிய செய்தி,

குறள்: மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற - என்றார்.

நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை முக மலர்ச்சியுடன், வரவேற்று, உள்ளத்து அன்புடன் விருந்து அளிப்பது என்பது உயர்ந்த நெறியாகும். அதுதான் மிகச்சிறந்த வேள்வியாகும். அப்படி செய்பவர்கள் வீட்டில் திருமகள், தேவர், முனிவர், சான்றோர் என்றும் தங்கி அருளை வழங்குவார்கள் என்பது நமது தமிழ் மரபு. இவற்றை வள்ளுவர் மிக அருமையாக வடிக்கிறார்.

குறள்: செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பின்
நல்விருந்து வானத் தவர்க்கு

நன்றியறிதல்:

நன்றியுணர்வே நற்பண்புகளின் தாய் என்றார் சிசரோ. நன்றி மிக்கவர் நெஞ்சமே கடவுள் வரும் ஆலயம் என்பது சான்றோர் வாக்கு. ஆனால், வள்ளுவரோ நன்றி அறிதல் தலைப்பின் மூலம் நமக்கு சொல்ல வருவது, நன்றி மறந்தால் நல்வாழ்க்கை நமக்கு இல்லை என்பதை நேரடியாக உணர்த்தினார்.

குறள்: எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"".

இப்படியாக, வள்ளுவர் மண்ணில் உயிர்த்த மனித குலத்தின் உயர்வுக்கு சொன்னது ஏராளம், தாராளம். ஆனால், பொங்கிப் பெருகிப் பாயும் நயாகரா நீர் வீழ்ச்சி போன்று திருக்குறளில் சொல்லப்பட்டுள்ள கருத்துக்களை நாம் ஒரே கட்டுரையிலோ, ஒரு மலரிலோ அடக்கி விட முடியாது, கூடாது.

இருந்தபோதும், மனித வாழ்வு துன்பமற்ற இரவும், இன்பம் உள்ள பகலுமாய் இருக்க, மனிதன் அறம் சார்ந்த சமூக வாழ்வு பெற, வாழ்வில் புகழும், ஊக்கமும் பெற்று நேர்மையோடு உன்னதமான வாழ்க்கையை அமைத்து கொள்ள திருக்குறள் நமக்கு திறவுகோலாக அமையும் என்பது வெளிப்படையான உண்மை!

தினமும், ஒரு திருக்குறள் படிப்போம், வள்ளுவன்படி நடப்போம்.

நாளும் உணர்வோம், வெல்வோம்.



# திருக்குறள் விழா - 2019

- கௌரி சேஷாத்ரி



விரிகுடாக் குறள் கூடம் வெற்றிகரமாக தனது 6வது வருட திருக்குறள் போட்டியை மார்ச் 19, 2019 சனிக்கிழமை அன்று ஹார்னர் ஜூனியர் உயர் நிலைப் பள்ளி ஃபிரிமாண்ட் இல் துவக்கியது. தன்னார்வ தொண்டர்களின் உதவியோடு திருக்குறள் போட்டி காலை 8 மணி முதல் மதியம் நான்கு மணி வரை நடைபெற்றது.

ஆறு பிரிவுகளில் நடைபெற்ற இந்தப் போட்டியில் மொத்தம் 238 குழந்தைகளும் 5 பெரியவர்களும் கலந்து கொண்டு 10,845 குறள்களை அதன் பொருளோடு சொல்லி பரிசுத் தொகையை அள்ளிச் சென்றார்கள். பெரியவர்கள் பிரிவில் மட்டும் 5 பேர் கலந்து கொண்டு 1497 குறள்களை சொன்னார்கள்.

விரிகுடாக் குறள் கூடம் சிறிய குழந்தைகளை உற்சாகப்படுத்தும் வகையில் ஒலிப்பெருக்கியை ஏற்பாடு செய்து மழலைக் குரலில் திருக்குறளைக் கேட்கச் செய்து பார்ப்பவர்கள் அனைவரையும் மகிழ்வித்தது. அமெரிக்காவில் வள்ளுவனின் புகழ் பரப்ப வந்த குழந்தைகளை எண்ணி விரிகுடாக் குறள் கூடம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைந்தது.

ஐந்து வயதிற்கு கீழ் உள்ளவர்கள் பிரிவில் மொத்தம் 51 குழந்தைகள் பங்கு பெற்றார்கள். முதல் பரிசை ஷ்ரேயா கார்த்திக் பெற்றார். இரண்டாம் பரிசை ராகினி சுதாகர், மூன்றாம் பரிசை அஷ்ரிதா மகேந்திரன் பெற்றார்.



ஷ்ரேயா கார்த்திக்



ராகினி சுதாகர்




அஷ்ரிதா மகேந்திரன்


6 முதல் 9 வயது வரை உள்ள பிரிவில் மொத்தம் 127 குழந்தைகள் பங்கு பெற்றார்கள். ரக்ஷிதா சுதாகர் முதல் பரிசையும், ஹர்ஷினி நாகப்பன் இரண்டாம் பரிசையும், ரோஷன் அண்ணாமலை மூன்றாம் பரிசையும் பெற்றார்கள்.



ரக்ஷிதா சுதாகர்



ஹர்ஷினி நாகப்பன்



ரோஷன் அண்ணாமலை

10 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகள் பிரிவில் மொத்தம் 52 குழந்தைகள் பங்கு பெற்றார்கள். மகேஷ் நிரஞ்சன் கார்த்திகேயன் முதல் பரிசையும், அனுஸ்ரீ நவநீதகிருஷ்ணன் இரண்டாம் பரிசையும், ரிஷி சந்திரசேகர் மூன்றாம் பரிசையும் பெற்றனர்.



மகேஷ் நிரஞ்சன் கார்த்திகேயன்



அனுஸ்ரீ நவநீதகிருஷ்ணன்



ரிஷி சந்திரசேகர்

**இந்த மலரின் அட்டையை அலங்கரிக்கும் படங்களை வரைந்தவர்கள்**

1. மிருதுளா மோகன்குமார் 2. லேகா ஆனந்த்
3. அம்ருதா வெளிவெள்ளி 4. ஸ்ம்ரிதி கிருஷ்ணா

13-15 வயது குழந்தைகள் பிரிவில் மொத்தம் 8 குழந்தைகள் பங்கு பெற்றார்கள். ஹரிணி நாகப்பன் முதல் பரிசையும், கல்யாண் மாணிக்கராஜா இரண்டாம் பரிசையும், மிருதுல்லா மோகன்குமார் மூன்றாம் பரிசையும் பெற்றார்கள்.



ஹரிணி நாகப்பன்



கல்யாண் மாணிக்கராஜா



மிருதுளா மோகன்குமார்

16-18 வயது பிரிவில் நேகா முதல் பரிசை வென்றார்.



நேகா யாதவ்

குழந்தைகளோடு சேர்ந்து பெரியவர்களும் திருக்குறள் போட்டியில் பங்கேற்க ஆசைப்பட்டதால் விரிகுடாக் குறள் கூடம் தமிழில் ஆர்வம் உள்ள பெரியவர்களை ஊக்கப்படுத்த அவர்களுக்கும் தனிப்பிரிவை ஏற்பாடு செய்தது.

பெரியவர்கள் பிரிவில் திருமதி. சுப்புலெட்சுமி கணபதி முதல் பரிசையும், திரு. அண்ணாமலை அருணாச்சலம் இரண்டாம் பரிசையும், திருமதி. கீதா யாதவ் மூன்றாம் பரிசையும் பெற்றார்கள்.





சுப்புலெட்சுமி கணபதி



அண்ணாமலை அருணாச்சலம்



கீதா யாதவ்

கடந்த ஐந்து வருடமாக பெரியவர்களும் திருக்குறள் போட்டியில் உற்சாகமாகப் பங்கேற்கின்றனர். இவர்களை ஊக்குவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறது விரிகுடாக் குறள் கூடம்.


2019 ஆம் ஆண்டில் பெரியவர்களும் குழந்தைகளும் சேர்ந்து மொத்தமாக 10,845 திருக்குறள்களைக் கூறினர்.

அன்றைய தினம் பல குரலில் பல குறள்கள் ஒலித்துக் கொண்டே இருந்தது இனிமையாகவும் மகிழ்ச்சியாகவும் பெருமையாகவும் இருந்தது.

விரிகுடாக் குறள் கூடம் 90க்கும் மேற்பட்டத் தன்னார்வ தொண்டர்களின் உதவியோடு கடந்த ஆறு வருடங்களாகத் திருக்குறள் ஒப்புவிக்கும் போட்டியை ஒரு இடத்திலும் பரிசு வழங்கும் நிகழ்ச்சியை வேறு ஒரு நாள் வேறு ஒரு இடத்திலும் நடத்தி சிறப்பிக்கின்றது.

திருக்குறள் போட்டி 2019ஆம் ஆண்டின் பரிசு வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை மார்ச் மாதம் 24 ஆம் நாள் டப்ளின் உயர்நிலைப்பள்ளியில் வெகு விமரிசையாக நடந்தது. சாஸ்தா புட்ஸ் உரிமையாளர் திரு. மணி கிருஷ்ணன் அவர்களும், ஆச்சி ஆப்பக்கடை உரிமையாளர் திரு. காளிதாஸ் ராஜூ அவர்களும் சிறப்பு விருந்தினராக இருந்து விழாவினை சிறப்பித்தனர்.

திருமதி. சியாமளா ரகுராம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். செல்வன். சித்தார்த் நஞ்சன்குட் கடவுள் வாழ்த்துப் பாட மாலை நான்கு மணிக்கு விழா இனிதே துவங்கியது. திரு. தினேஷ் பாபு வரவேற்புரை வழங்கினார்.







இதை தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. செல்வி. நிகிதா கார்த்திகேயன் அழகான தமிழ்ப் பாடலுக்கு நடனமாடினார். திரு. முத்துக்குமார் அனந்தன் பாடினார். திரு. பிரதீப் தலைமையில் குழந்தைகள் மிக அழகாக சில திருக்குறள்களை தேர்ந்து எடுத்து பாமாலையாக்கிப் பாடினார்கள்.







பிறகு இந்த வருட விழாவின் சிறப்பாக திருவள்ளுவரின் உருவச்சிலையை திரு. மணி கிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தார். 4 அடி திருவள்ளுவர் சிலையை இந்தியாவில் இருந்து எடுத்து வந்து விரிகுடாக் குறள் கூடத்திற்கு பரிசாகக் கொடுத்த திரு. மணி கிருஷ்ணன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளும் பாராட்டுதல்களும்.

அடுத்து தன்னார்வ தொண்டர்களை மேடைக்கு அழைத்து விரிகுடாக் குறள் கூடம் கௌரவப்படுத்தியது. திருக்குறள் போட்டி நடக்க உதவிய அனைத்து நடுவர்களுக்கும் விரிகுடாக் குறள் கூடம் நன்றியை சொல்லி கௌரவப்படுத்தியது. சிறப்பு விருந்தினர்களான திரு.மணி கிருஷ்ணன் மற்றும் திரு.காளிதாஸ் ராஜு அவர்களை மேடைக்கு அழைத்து கௌரவப்படுத்தியது. அவர்கள் இருவரும் விழாவையும் அனைத்து குழந்தைகள் மற்றும் பெற்றோர்களையும் வாழ்த்தி பேசினார்கள். அவர்கள் விழா மலரையும் வெளியிட்டார்கள்.



பெர்க்லி பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியை முனைவர் திருமதி பாரதி சங்கரராஜுலு அவர்கள் இந்த வருடம் இரண்டு தங்க நாணயங்களை கொடுத்து அவற்றை இருவருக்குப் பரிசளிக்கக் கோரினார்.



திருக்குறளை மனனம் செய்து ஒப்பித்த 263 குழந்தைகளில் வயதில் சிறிய குழந்தையை கண்டு அந்த பிஞ்சு மழலை மாறா 2 வருடம் 4 மாதங்களே ஆன குழந்தை இறையொளி ஃப்ரோஸ்காந்தி அவர்களுக்கும் மற்றும் எல்லா பிரிவுகளிலும் அதிக மதிப்பெண் எடுத்த குறள் சொன்ன சிறுவன் மகேஷ் நிரஞ்சன் கார்த்திகேயன் அவர்களுக்கும் இரு தங்க நாணயங்களை பரிசாகக் கொடுத்து எங்கள் விரிகுடாக் குறள் கூடத்திற்கு மாபெரும் பெருமை சேர்த்துக் கொடுத்தார்.





திருக்குறள் போட்டியில் பங்கேற்ற அத்தனைக் குழந்தைகளுக்கும் பரிசுகள் கொடுக்கப்பட்டது. தங்கள் குழந்தைகளை மேடையில் பரிசுடன் பார்த்த பெற்றோர்கள் கண்களில் பெருமையும் மகிழ்ச்சியும் பொங்கியது.

விழா மலரின் அட்டைப்படத்திற்கு ஓவியப் போட்டி நடத்தியதில் விரிகுடாப் பகுதியை சேர்ந்த பல குழந்தைகள் பங்கேற்றனர். அனைத்து குழந்தைகளின் ஓவியங்கள் விழா மலரை அலங்கரித்தது. இதில் பிரணிதா ராஜா சிறப்பான ஓவியம் முதல் பரிசைப் பெற்றது. இவரின் ஓவியம் விழா மலரின் அட்டையை அலங்கரித்தது.

குறள் சொல்லி மழலைக்குரலால் வசப்படுத்திய அனைத்துக் குழந்தைகளுக்கும் விரிகுடாக் குறள் கூடம் பரிசுத் தொகையும், வாழ்த்துச் சான்றிதழையும் கொடுத்து கௌரவித்தது. திருமதி. காவேரி கணேஷ் நன்றி உரை கூற விழா இனிதே முடிந்தது.



இது போன்ற குழந்தைகளின் திருக்குறள் கற்கும் முயற்சியும்,பெற்றோர்களின் ஊக்குவிப்பும், தன்னார்வ தொண்டர்களின் ஒத்துழைப்பும் மற்றும் புரவலர்களின் பங்களிப்பும் இருக்கும் வரை விரிகுடாக் குறள் கூடம் இந்த நிகழ்வை வருடந்தோறும் நடத்தும் என்ற நம்பிக்கை மனதில் பூத்தது.

# AappaKadai


**Indian Chettinad**

**Vegetarian & Non-Vegetarian**

விரிகுடா பகுதி குறள் கூடம் (BAKK) அமைப்பினருக்கும்
திருக்குறள் போட்டி 2020ல் பங்குபெறும் குழந்தைகளுக்கும்

## வாழ்த்துகள்

வெற்றிகரமான
ஒன்பதாவது
ஆண்டில்



Call us for Catering
408.243.2778 ● 408.732.2244
925.750.7709 ● 925.750.7719

9
ANNIVERSARY

Try our
best-in-class
Full Service
Catering

உங்கள் தொடர்ந்த
ஆதரவுக்கு நன்றி
இந்த பண்டிகைக்
காலத்தில் எங்களோடு
உணவருந்த வாருங்கள்
அன்புடன் அழைக்கிறோம்

## வாங்க சாப்பிடலாம்

**Sunnyvale, CA**
1105 W El Camino Real
Sunnyvale, CA 94087
**Tel: 408.732.2244**


**Santa Clara, CA**
3075 El Camino Real
Santa Clara, CA 95051
**Tel: 408.243.2778**

**Pleasanton, CA**
4555 Hopyard Road
Pleasanton, CA 94588
**Tel: 925.750.7709**

Like us on **Facebook**

**www.AappaKadaiUSA.com**


shastha foods
12 BATTER FLAVORS
Fresh & Natural
shastha foods
ready to cook stone ground batter
OATS DOSA
Shastha Foods
organic
IDLI BATTER
Multi Millet Dosai
BATTER
Shastha Foods
organic
BROWN RICE DOSA BATTER
Shastha Foods
organic
DOSA BATTER
shastha foods
ready to cook stone ground batter
BROWN RICE DOSA
NATURALLY FERMENTED
Brown Rice
Idly Batter
shastha foods
ready to cook stone ground batter
Uthappam Batter
QUINOA BATTER
IDLY/ DOSA
Multi Millet
ADAI
shastha foods
Idli Batter
shastha foods
Dosa Batter
shastha foods
Moong Dosa
shastha foods
Ragi Dosa
100 Million + Dosas/Idlis
Delivered (& counting...)
Also available on Amazon - amazon.com/shasthafoods
Distributed by: Shastha Foods CA, USA.
2205 Ringwood Avenue San Jose, CA 95131. 408 501 7801 | contact@shasthafoods.com | www.shasthafoods.com



# திரையிசையில் குறள்

நாம் ஒன்றை நேசிக்கத் துவங்கிவிட்டால் அதைப்பற்றிய சிந்தனையிலேயே களித்திருப்பது இயல்புதான். அந்த நேசமே காதலாய் மாறும்போது காணும் இடமெல்லாம் அதுவாகவே தோன்றும். குறளின் மீதான நேசம், செய்யுள் என்ற அளவில் தங்கிவிடாமல் தாங்கள் கொண்ட தொழிலிலும் புகுத்திப் பார்ப்பது தமிழர்க்கே உரிய தனிக்குணம். அந்தவகையில் தமிழ்த்திரையுலகில் கோலோச்சியவர்கள் திருக்குறளைப் பயன்படுத்தாமல் இருக்கமுடியுமா? திருக்குறளின் தாக்கம் இல்லாமல் கவி எழுதியிருக்க முடியுமா? திரைச் சித்திரங்களை இயக்கியிருக்க முடியுமா? ஒரு சில திரைப்பாடல்களை மட்டும் குறள் பயின்று வரும் வரிகளில் காண்போம்.

## மணந்தால் மகாதேவி இல்லையேல் மரண தேவி

தமிழ்த்திரையில் சூப்பர் டூப்பர் பஞ்ச் டயலாக். இதற்கு சொந்தக்காரர் பொள்ளாச்சி எஸ் வீரப்பா. இவர் ஆறு முதலமைச்சர்களுடன் திரைத்துறையில் பணியாற்றிய அனுபவத்துக்கு சொந்தக்காரர். திரைப் பிதாமகர் எல்லிஸ் ஆர் டங்கன் பட்டறையில் பட்டை தீட்டப்பட்டவர். இந்த பி.எஸ்.வீரப்பா தயாரிக்க சத்யம் இயக்கிய படம் 'யார் நீ?' ஆவி, உருவம், ஆத்மா, முன்ஜென்மம், கொலை, வழக்கு என பல்வேறு திடுக்கிடும் திருப்பங்களைக் கொண்ட சஸ்பென்ஸ் த்ரில்லர் வகைப் படம்.

தமிழ்த் திரையுலகின் மக்கள் கலைஞர் ஜெய்சங்கர் நடிப்பில், 1966ல் வேதா இசையமைப்பில் டி.எம். சௌந்தர்ராஜன், எல்.ஆர்.ஈஸ்வரி குரலில் பெரும் ஹிட் அடித்த பாடல் இது.

"பார்வை ஒன்றே போதுமே
பல்லாயிரம் சொல் வேண்டுமா"

முதலிரண்டு வரிகளிலேயே குறளைக் குழைத்துக் கொடுத்தவர் கவியரசர் கண்ணதாசன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆம்.



கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின்,
வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல" (1100)

என்னும் குறளை நினைவுபடுத்தும் பாடல் அது.

பொருள் : காதலரில் ஒருவர் கண்ணோடு மற்றொருவர் கண்ணும் பார்வையால் பேசிவிட்டால் அதற்கு பிறகு வாய்ச் சொற்களால் ஒரு பயனும் இல்லை.

## நேற்றுவரை நீ யாரோ? நான் யாரோ?

1965ல் எஸ்.எஸ் வாசன் தயாரிப்பில் சி. சீனிவாசன் இயக்கிய 'வாழ்க்கைப் படகு'.



காதல் மன்னன் ஜெமினிகணேசன் - தேவிகா நடிப்பில், விஸ்வநாதன் - ராமமூர்த்தி இசையமைப்பில், பி.பி. ஸ்ரீநிவாசின் காந்தக்குரலில் வெளியான நேற்றுவரை நீ யாரோ? நான் யாரோ? பாடலைக் கேட்டு மயங்காதவர்களே இருக்க முடியாது. பாடலைக் கேட்டு மயங்கும்போதே.... ஏதோ ஒரு குறளின் குரல் ஒலிக்கிறதே! கொஞ்சம் அந்த வரிகளை உற்றுக் கேட்போம்.

'உன்னை நான் பார்க்கும் போது

மண்ணை நீ பார்க்கின்றாயே...

விண்ணை நான் பார்க்கும் போது

என்னை நீ பார்க்கின்றாயே...''


பாடலின் இடையிரண்டு வரிகளிலும் குறளைக் குழைத்துக் கொடுத்தவர் கவியரசர் கண்ணதாசன் என்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆம்.



யான் நோக்குங்காலை நிலன் நோக்கும்
நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்“ (குறள் 1094)

பொருள் : நான் அவளை பார்க்கும்போது தலைகுனிந்து நிலத்தைப் பார்ப்பாள், நான் பார்க்காதபோதோ என்னைப் பார்த்து மெல்ல தனக்குள்ளே சிரிப்பாள்.

## நிலவோ மலரோ பெண்ணோ



1964 இல் ஆர் மாதவன் இயக்க, ஆர் எம் வீரப்பன் தயாரித்த படம் ‘தெய்வத்தாய்’. எம்ஜிஆர், சரோஜாதேவி, நம்பியார், அசோகன், நாகேஷ் நடிப்பில் எம்எஸ் விஸ்வநாதன் டி.கே. ராமமூர்த்தி இசையமைக்க வாலியின் வரிகளில் குறள் மயம் தான்.

ஒரு பெண்ணைப் பார்த்து
நிலவைப் பார்த்தேன்
நிலவில் ஒளியில்லை

பாடலைக் கேட்டு மயங்காதவர்கள் இல்லை.

முதல் இரண்டு வரிகளிலேயே

மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி ( 1118)

பொருள்: திங்களே! இம் மாதரின் முகத்தைப் போல உன்னால் ஒளி வீச முடியுமானால், நீயும் இவள் போல் என் காதலுக்கு உரிமை பெறுவாய்.

என்னும் குறளை எடுத்தாளுகிறார் கவிஞர்,

அடுத்த இரு வரிகளிலேயே

அவள் கண்ணைப் பார்த்து
மலரைப் பார்த்தேன்
மலரில் ஒளியில்லை”

இன்னொரு குறளையும் கையாளுகிறார்.

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று ( 1112)

பொருள் : நெஞ்சமே! இவளுடைய கண்கள் பலரும் காண்கின்ற மலர்களை ஒத்திருக்கின்றன, என்று நினைத்து ஒத்த மலர்களைக் கண்டால் நீ மயங்குகின்றாய்.

அமுதைப் பருகுவதில் தயக்கம் என்ன? இரண்டு குறள் மட்டும் தானா. இன்னொன்றும் சேர்த்துத் தருகிறேன் என இன்னொரு குறளையும் உள்ளே வைத்தார் வாலி.

“அவள் இல்லாமல் நானில்லை,
நான் இல்லாமல் அவள் இல்லை”

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கும் இடத்து.(1124)

பொருள் : ஆய்ந்து தேர்ந்த அரிய பண்புகளையே அணிகலனாய்ப் பூண்ட ஆயிழை என்னோடு கூடும்போது, உயிர் உடலோடு கூடுவது போலவும், அவள் என்னைவிட்டு நீங்கும்போது என்னுயிர் நீங்குவது போலவும் உணருகிறேன்.

## அவள் வருவாளா?



அடுத்த தலைமுறையின் கதாநாயகர்கள் சூர்யா, விஜய் - சிம்ரன் நடிப்பில், 1997ல் வெளியான ‘நேருக்கு நேர்‘.

தேவா இசையமைப்பில், ஹரிஹரனின் காந்தக்குரலில் வெளியான அவள் வருவாளா?அவள் வருவாளா ? பாடலை பாடியே பைத்தியமான ஆண்கள் பலர். பாடல் முழுவதும் ஆங்கிலவார்த்தைகளின் தாக்கம் அதிகமாய் இருந்தாலும் பாடல் முடியும் தருவாயில் குறளின் குரல் ஒலிக்கிறதே. திரைப்பாடலின் இறுதி வரிகளைக் கேட்போம்.

‘‘அவளை ரசித்தபின்னே
நிலவு இனிக்கவில்லை
மலர்கள் பிடிக்கவில்லை

ஏ ....
கண்டு கேட்டு
உண்டுயிர்த்து
உற்றறியும் ஐம்புலனும்
பெண்ணில் இருக்கு
இந்த பூமி மீது வந்து
நானும் பிறந்ததற்கு
பொருளிருக்கு பொருளிருக்கு''

ஆஹா... அல்ட்ரா மாடர்ன் ஆண்களுக்குள்ளும் இந்த பூமியில் தான் வந்து பிறந்ததற்கு பொருள் கண்டுகொண்ட திருப்தி தெரியும் இடம் இதுதான் என்று கவிஞர் கூறுகிறார். அந்த இடம் பெண்தானாம். இல்லை, இல்லை! தமிழில் வாழும் குறள் தான் என்றும் பொருள் கொள்ளலாமே. வைரவரிகளை இறுக்கிக் கோர்த்தவர் கவிப்பேரரசு வைரமுத்து அல்லவா.

அவர் கோர்த்துத் தந்த குறளை அறிவோமா?

கண்டுகேட்டு உண்டுயிர்த்து உற்றறியும் ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள (1101)

கண்டும் கேட்டும் உண்டும் முகர்ந்தும் உற்றும் அறிகின்ற ஐந்து புலன்களாகிய இன்பங்களும் ஒளி பொருந்திய வளையல் அணிந்த இவளிடத்தில் உள்ளன.

## நாள்காட்டியும் கடிகாரமும் என்ன செய்யும்?

எஸ்.ராஜகுமாரன் இயக்கத்தில் ஆர்.பி.செளத்ரி தயாரிப்பில் 1999 ல் வெளியான வித்தியாசமான கதைக்களம் கொண்ட திரைக்காவியம் 'நீ வருவாய் என'.



அஜித்குமார், பார்த்திபன், தேவயானி நடிப்பில், எஸ். ஏ. ராஜ்குமார் இசையமைப்பில் கே.எஸ்.சித்ரா, எஸ்.பி.பி குரலில் படத்தில் மும்முறை தவழ்ந்து வரும் பாடல் 'பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்திருந்தேன்'. காதல் துணையைத்தேடி ஏங்கும் ஏக்கத்தை நிறைவாய்க் கொடுத்த பாடல். நிறைவு என்றாலே அங்கு குறள் இல்லாமலா? இப்பாடல் காட்டும் குறளின் குரல் என்ன? பாடல் இறுதிவரிகளில் குறளோடு நிறைவுசெய்கிறார் பாடலாசிரியர் ரவிசங்கர்.

''மணி சரிபார்த்து
தினம் வழிபார்த்து
இரு விழிகள் தேய்கிறேன்
நீ வருவாயென''

குறளை ஊகிக்க முடிகிறதா நண்பர்களே?

எஸ்.பி.பி. ஜானகி இணைக் குரலில் இதே குறளின் பின்பகுதியை வேறொரு பாடலில் கேட்டிருக்கிறோம்.

ஆம். 1986ல் நதியா-சுரேஷ் நடிப்பில் டி.ராஜேந்தர் எழுதி இசை அமைத்த படம் 'பூக்களைப் பறிக்காதீர்கள்'.



நாட்கள் நகராதோ
பொழுதும் போகாதோ
மாலை எனை வாட்டுது

என காதலர் ஏங்கித் தம் இணை வரும் நாளை எண்ணி ஒற்றுத் தேயும் விரலை ஒத்த பாடல் அது.

அந்தத் திருக்குறள் இதுதான்.

வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

பொருள் : வருவார் வருவார் என வழி பார்த்துப் பார்த்து விழிகளும் ஒளியிழந்தன; பிரிந்து சென்றுள்ள நாட்களைச் சுவரில் குறியிட்டு அவற்றைத் தொட்டுத் தொட்டு எண்ணிப் பார்த்து விரல்களும் தேய்ந்தன.

## அவர் நெஞ்சு அவர் காதல்

கே. டி. குஞ்சுமோன் தயாரிப்பில் பிரவின் காந்தி இயக்கத்தில் 1997ல் வெளிவந்த படம் ரட்சகன்.

நாகார்ஜுனா சுஸ்மிதா சென் நடிப்பில் வைரமுத்துவின் வைரவரிகளில் ஏ.ஆர். ரகுமான் இசையில் கே. ஜே. யேசுதாஸ், சாதனா சர்கம் குரல்களில், தலைவி வராததை அறிந்து ஏங்கும் தலைவனின் புலம்பலாகவும் தன்நெஞ்சையே திடப்படுத்துவதாகவும் அமைந்த உணர்ச்சி கீதம்....

நெஞ்சே நெஞ்சே மறந்துவிடு
நினைவினை கடந்துவிடு
நெஞ்சே நெஞ்சே உறங்கிவிடு
நிஜங்களை துறந்துவிடு



இந்தப் பாடலைக் கேட்கும்போதெல்லாம் தலைவி தலைவனை எண்ணிப் புலம்புவதாக அமையும் இக்குறள் நினைவில் வந்து மீளுகிறது. வள்ளுவரின் கற்பனைத் திறனை போற்றுவது எவ்வாறு?

அவர்நெஞ்சு அவர்க்காதல் கண்டும்
எவன்நெஞ்சே
நீஎமக்கு ஆகா தது. (1291)

பொருள் : நெஞ்சே! அவருடைய நெஞ்சம் (நம்மை நினையாமல் நம்மிடம் வராமல்) அவர்க்குத் துணையாதலைக் கண்டும் நீ எமக்குத் துணையாகாதது ஏன்?

இவையெல்லாம் சில குறள் நட்சத்திரப்பாக்கள் தாம். முழுவதுமே குறளாகவும், ஒன்றுக்குமேற்பட்ட குறள்களை சந்தத்தில் அமைந்த பாடல்களும் உண்டு. இனி திரைப்பாடல்கள் கேட்கும்போது அவற்றை குறளோடு பொருத்தி மகிழ்வோம்.

இறுதியாக,

புலம்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்
கலத்தல் உருவது கண்டு

இக்குறள் ஒலிக்கும் மிகப் பிரபலமான திரைப்பாடலைக் கண்டுபிடியுங்களேன்.




Santa Clara location
777 Lawrence Expressway Blvd
Santa Clara, CA 95051
Thank you for your support



ANJAPPAR
Chettinad Indian Restaurant


**Chettinad Indian Restaurant**

458 Baber Lane, Milpitas, CA 95033
**TEL: (408) 435.5500**
E-mail: info@anjapparca.com
Web: www.anjapparca.com

Business Hours: Mon - Fri 11:30 PM - 2:30 PM | 6:00 PM - 10:00 PM | SAT, SUN: 11:30 AM - 10:00 PM




Lakshna Sivadharsan,
Grade 4, Age 9,
Union City, CA






Mruthula Mohankumar,
Grade 8, Age 14,
Pleasanton, CA








Preethika Prabhakaran
Grade 4, Age 10,
Fremont, CA








Smriti Krishna
Grade 4, Age 10,
San Ramon, CA




Sugasri Dhanabal Ishwarya
Grade 1, Age 6,
Livermore, CA





Nidhilan Hariharan
Grade KG, Age 5,
Union City, CA




Sirseelan Mugilan
Grade 5, Age 10,
San Ramon, CA

## குறள் சொல்லும் குரலோடு


# வள்ளுவம் தீட்டிய விரல்கள்




Vidhulan Hariharan
Grade 2, Age 7,
Union City, CA



Dhanvi Rajkumar
Grade KG, Age 5,
Pleasanton, CA



Aarav Sivaprakash
Grade 1, Age 6,
Milpitas, CA



Lekha Anand
Grade 7, Age 12
Sunnyvale, CA

# குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்






Aadarshini Anand
Grade 4, Age 10,
Fremont, CA






Aathraey Shrikanth
Grade 6, Age 12,
Fremont, CA






Ashrithaa Mahendran
Grade 1, Age 6,
Cupertino, CA







Kamalesh Aravindkumar
Grade 3, Age 8,
Fremont, CA

# வாழ்வியல் வள்ளுவம்

*- திரு. நாறும்பூநாதன்*



தமிழ்நாட்டில் பிறந்து ஓரளவு பள்ளிக்கல்வி பயின்ற ஒருவன் யாரை தெரிந்திருக்கிறானோ இல்லையோ, திருவள்ளுவரை நிச்சயம் தெரிந்து வைத்திருப்பான். குறைந்தபட்சம் மனப்பாட செய்யுளில் ரெண்டு குறட்பாக்களை எழுதி நான்கு மதிப்பெண்கள் பெற்றிருப்பான். அதுபோக அரசு பேருந்தில் பயணம் செய்யும் படிக்காத பாமரனும், ஓட்டுனரின் முதுகுப்புறத்தில் உள்ள பலகையில் ஒரு திருக்குறள் எழுதி வைத்திருப்பதையும் அறிவான். அறுபதுகளில் ஓவியர் வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த தாடி வைத்த திருவள்ளுவர் படம், சகல பகுதி மக்களையும் சென்றடைந்திருக்கிறது.

அப்படியே மறந்தாலும், திருமண வீடுகளில் வாழ்த்துரை வழங்கும் தமிழ் பண்டிதர்களின் நாவில்

“மங்கலம் என்ப மனை மாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட்பேறு”

என்று அடுக்கு மொழிகளில் வரும்போது, திருக்குறளும் திருவள்ளுவரும் நினைவில் வந்துபோவார்கள்.

சிலர், திருமண பத்திரிக்கைகளில் “முருகன் துணை “க்குக் கீழே

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது “

என்று போட்டு தங்களின் தமிழ்ப்பற்றை நிலை நாட்டி இருப்பார்கள்.

எல்லாம் சரி.. திருவள்ளுவரைப் பற்றி பேசுவதெல்லாம் சரி. வள்ளுவத்தை நாம் வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றிருக்கிறோமா?

அவரது அறக்கருத்துக்களின் முக்கியத்துவத்தை உணர்ந்திருக்கிறோமா? குறளின் உட்கருத்துக்களை பொதுவெளியில் கொண்டு சென்றிருக்கிறோமா? என்று யோசித்துப் பார்த்தோம் எனில், இல்லை என்றே சொல்ல வேண்டியிருக்கும்.

சங்க இலக்கியங்கள் பலவும், மன்னனை துதி பாடியே எழுதப்பட்ட சூழலில், எந்த மன்னனையும் வாழ்த்திப்பாடாமல், எந்த ஒரு மதக் கடவுளையும் பெயர் சொல்லிக் குறிப்பிடாமல், பொதுவான வணக்கமாக

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன்
முதற்றே உலகு”

என்றே சொல்லி விட்டுப் போகிறார். இது தான் வெளிநாட்டில் இருந்து மதப்பிரச்சாரம் செய்ய வந்த வீரமாமுனிவரை வியப்பில் ஆழ்த்துகிறது. ஜி.யு.போப்பை திருக்குறள் கற்க வைத்தது. கால்டுவெல் அவர்களை திருக்குறள் பற்றியும், தமிழ் மொழியின் தொன்மை பற்றியும் பேச வைத்தது. எத்தனை தூரம் விஞ்ஞானம் வளர்ச்சியடைந்தாலும், மனித மனம் இன்னும் குறுகிப்போய்த்தான் இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

பிறர் பொருளை அபகரித்தல், பிறன் மனை நோக்குதல், பொறாமை, போட்டி, கடுஞ்சொற்கள் என காலம் காலமாய் மனிதன் அதே பாதையில் தான் பயணப்பட்டுக் கொண்டிருக்கிறான். மனித வாழ்வின் அறம் சார்ந்த கருத்துக்களை ஒண்ணேமுக்கால் அடிகளில் சுருங்க சொன்ன வள்ளுவன் குமரிக் கடலின் முன்பு நெடிதுயர்ந்து நின்றபடி நம்மை எல்லாம் பார்த்து சிரித்துக் கொண்டிருப்பது போல படுகிறது.

மனித குல வரலாற்றில் வேளாண்மைக்கு மிக முக்கிய இடம் உண்டு. உழவு தொழில் தான் உயிரினங்களுக்கும், மனிதர்களுக்கும் உணவு படைக்கிறது என்பது யாவரும் அறிந்த உண்மை. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் என்று சொல்லப்படுவதும் அதனால் தான்.

அதனால் தான்,

“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை “

என்று வள்ளுவன் சொல்லுகிறான். உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்று அழுத்தமாய் அவனால் சொல்ல முடிகிறது. ஆனால், இன்று உழவன் நிலையோ ? கடந்த பத்தாண்டுகளில் இந்தியாவில் தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் எண்ணிக்கை 13 லட்சம். விவசாய விளைபொருட்களுக்கு நியாய விலை கிடைப்பதில்லை. மழை பொய்க்கிறது..கந்து வட்டிக்கு கடன் வாங்கி பலியாகும் கொடுமை..!

சமூகத்தின் கடைக்கோடியில் கோவணத்துணியுடன் பரிதாபமாய் நின்று கொண்டிருக்கிறான் ஏழை விவசாயி..

இவனிடம் போய்

“உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர் “

என்று சொன்னால் சிரிக்க மாட்டானா ?

எனக்குப் பின்னால் எனது மனைவி மக்கள் கூட வரமாட்டார்களே அய்யா என்று ஏளனம் செய்வான். தனது அப்பா ஒரு விவசாயி என்று சொல்வதை சொல்ல கூச்சப்படும் மாணவர்கள் நிரம்பிய தேசமாய் இன்று மாறிப்போய் விட்டது.

அவன் எப்படியும் நினைத்து விட்டுப் போகட்டும். அவனை நாலு எழுத்து எழுதப்படிக்க வைத்து விட வேண்டும் என்று நினைத்து தான் ஒவ்வொரு விவசாயியும் தனது பிள்ளையை பள்ளியில் சேர்க்கிறான். அது உலக அறிவை பெறுவதற்கு அல்ல..அவனாவது படித்து வேறு நல்ல உத்தியோகத்திற்கு செல்லட்டும்..மறந்தும் விவசாயம் பக்கம் வந்து விட வேண்டாம் என்ற எண்ணத்தில் தான்.

ஆனால், அந்த கல்வியும் இன்று வளம் கொழிக்கும் வியாபாரமாகி விட்டதே என்ன செய்ய ? பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என்பது அறிந்து பத்தாம் வகுப்பில் 90 சதவீதம் மதிப்பெண் எடுத்த மகனைக்கூட தீப்பெட்டி தொழிலுக்கும், பீடி சுற்றும் தொழிலுக்கும் அனுப்பி கொண்டிருக்கிறான்.

காலையில் 5 மணிக்கு எழுந்து நடைப்பயிற்சிக்கு செல்லும் நிலை இன்று பலருக்கும் வந்து விட்டது. உடலுழைப்பு இல்லாததால், சர்க்கரை வியாதி பத்தில் ஆறு பேருக்கு இருக்கிறது. அப்படி எழுந்து செல்லும்போது உடன் வரும் நண்பர்களோடு பேசிக்கொண்டு போகிறார்கள்.

“அவன் வெளங்கவே மாட்டான் சார்..அவனுக்கு நல்ல சாவே வராது..”என்று யாரையோ திட்டியபடி இருவரும் பேசிக்கொண்டே போகிறார்கள். காலையில் 5 மணிக்கு எழுந்து, யாரோ ஒருவனை, அவன் என்னதான் அயோக்கியனாகவே இருந்து விட்டுப்போகட்டுமே, இப்படி எல்லாம் திட்டுவதற்கு என்ன அவசியம் வந்து விட்டது?

அதிகாலையில் வலசை போகும் பறவை கூட்டங்களை ரசிக்கலாம்..விதம் விதமாய் வர்ண ஜாலங்கள் நிகழ்த்தும் மேக கூட்டங்களை ரசித்தபடி செல்லலாம். ஆனால், மனிதர்களை நீசத்தனமாய் ஏசிக்கொண்டே நடப்பதற்கு எந்த கல்வி கற்று தந்தது நமக்கு?

கற்பவை கற்றபின், நிற்க அதற்குத்தக என்பதெல்லாம் ரெண்டு மதிப்பெண் வாங்குவதற்கு படித்த பாடம் மட்டும் தானா ?

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலா சொல் "

என்பதை சுய வாழ்க்கையில் கடைப்பிடிக்காமல், உடலையும், உள்ளத்தையும் சீரழிப்பது எதன்பால் ?

130 கோடி மக்களை கொண்ட பாரத தேசத்தில் இப்போதும் கூட இரவு உணவு உண்ணாமல் பிளாட்பாரத்தில் படுத்து தூங்குவோர் எண்ணிக்கை 32 கோடி..வீடின்றி,பாதுகாப்பின்றி, குளிரிலும்,வெயிலிலும் வாடுவோர் பற்றி ஆட்சியாளர்கள் யாதொரு கவலையும் படுவதில்லை. அதிலும், பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் இல்லவே இல்லை. நடைமேடையில் படுத்திருப்பார் மீது, குடித்து விட்டு போதையில் கார் ஒட்டி விட்டு ஜாமினில் வெளி வரும் பெரிய மனிதர்களுக்கான உலகமாய் மாறிப்போன உலகம் இது. ரோட்டோரம் இவர்களை யார் படுக்க சொன்னது என்று வியாக்கியானம் வேறு.

"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும்
சேராதிருப்பது நாடு "

என்பதை ஆட்சியாளர்கள் என்று உணர்வார்கள் ? நாடு என்பதற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவனின் குறளை மட்டும் மேற்கோள் காட்டினால் போதுமா ?

"தெய்வங்களை சந்திக்கும் வேதம் அல்ல திருக்குறள். பச்சை மனித நேயத்தின் பாடம் பக்கத்திற்கு பக்கம். அதனால் தான் வானத்தை கை காட்டுவதல்ல திருக்குறள். மண்ணின் சாரத்தை ஏந்திய ஊற்று "என்று சொல்கிறார் சிந்தனையாளர் ஆல்பர்ட் சுவைட்சர். ஒருமுறை இவர் கூறும்போது, "எனக்கு மறுபிறவி மீது நம்பிக்கை கிடையாது. ஒருவேளை அப்படி ஒன்று இருந்து, நான் மறுபடியும் பிறக்க நேரிட்டால், தமிழ்நாட்டில் பிறந்து தமிழ் மொழியில் திருக்குறளையும், திருவாசகத்தையும் படித்து மகிழ விரும்புகிறேன் "என்று கூறியவர்.

திருக்குறளின் சாரத்தை உணர்ந்தவர்களில் பலர் மேல்நாட்டு அறிஞர் பெருமக்கள். நாம் தான் அதனை முழுமையாய் உணரவில்லை. உணர்ந்து நமது வாழ்வில் அந்த அறக்கருத்துக்களை கடைப்பிடிக்க முயற்சி செய்தால், இனிய வாழ்க்கை நமக்கு அமையும்.

தமிழ்நாட்டில், பல்வேறு இடங்களில் திருவள்ளுவர் மன்றங்கள், திருவள்ளுவர் கழகங்கள் செயல்பட்டு வருகின்றன. எனது பள்ளிப்பருவ காலங்களிலேயே கோவில்பட்டியில், திருவள்ளுவர் மன்ற கூட்டங்களில் நான் தொடர்ந்து சென்று வந்த காரணத்தினால் தான், இப்போதும் என்னால் இலக்கியத்தில் ஈடுபாடு கொண்டு செயல்பட முடிகிறது. ஒரு இலக்கிய கூட்டத்தை எப்படி நடத்த வேண்டும் என்று அறிந்து கொள்ள முடிகிறது. திருவள்ளுவர் கழகங்களுக்கு மாணவர்கள்,இளைஞர்கள் வருவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். பேச்சுப்போட்டிகள், கட்டுரை போட்டிகள் நடத்தப்பட வேண்டும். குறிப்பாக, திருக்குறள் பதவுரைகள் சொல்லப்பட்டு விளக்கம் கொடுக்கப்பட வேண்டும். வெறுமனே, 1330 குறட்பாக்களை மனனம் செய்து ஒப்புவிப்பது எந்த பயனையும் தராது என்பது அடியேனின் கருத்து. திருக்குறள் கூறும் அறக்கருத்துக்களை மாணவர்களுக்கு சிறுசிறு கதைகள் மூலம் விளக்க முற்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே வாழையடி வாழை போல, அடுத்தடுத்த தலைமுறைகள் திருக்குறளின் மேன்மையை உணர்ந்து கொள்ளமுடியும்.

## படமும் குறளும்

மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றுஅவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. (65)



திரு T.N. நாகு பிள்ளை அவர்கள்
R.K.N.வெற்றிவேல் உடன்.

புகைப்படம் மாடக்குளம் பிரபாகரன்

# திருக்குறள் இசையோடு பேசுவோம்!

## பிரதீப் சுவாமிநாதனுடன் ஒரு நேர்காணல்

உரையாடிவர் : மல்லிகா பாஸ்கரன்

திரு. பிரதீப் சுவாமிநாதன் அவர்கள் விரிகுடாப் பகுதியில் தொழில்நுட்பத் துறையில் அதிகாரியாகப் பணிபுரிந்து வருகிறார். இசைத்துறையில் வல்லவர். இங்கு அமெரிக்கா வருவதற்கு முன்பு இந்தியாவில் சிறந்த முன்னணி இசை இயக்குனர்களிடம் பணியாற்றியவர். இந்திய பாரம்பரிய இசை மற்றும் மேற்கத்திய இசை இரண்டிலும் நல்ல தேர்ச்சி உடையவர் என்பதை அவரது இசைவெளியீடுகளில் நாம் காண இயலும். தமிழ் இலக்கியத்தின்பால் அவரது ஈடுபாடு அளப்பரியது. பிரதீப் தற்போது தனது இசைத்திறனை திருக்குறள் போன்ற இலக்கியங்களுக்கு இசை அமைத்துப் பாடி மேடையேற்றி வருகிறார். நமது திருக்குறள் விழாவில் மூன்றாவது வருடமாக இந்தவருடமும் தேர்ந்தெடுத்த சில குறள்களுக்கு இசைக்கோர்வை, இசையமைப்பு செய்து, அவரது இசைக்குழுவின் மூலம் மேடையேற்ற இருக்கிறார். திருக்குறள் விழா மலருக்காக அவருடன் ஒரு இனிமையான சந்திப்பு.



**திருக்குறள் போன்ற செய்யுள் வடிவத்தை இசையமைத்து பாடலாக்க வேண்டும் என்கிற எண்ணம் உங்களுக்கு எப்படி வந்தது?**

பள்ளி செல்லும் வயதில் திருக்குறள் என்னுடைய விருப்பத்தேர்வான பாடமாக இருந்தது, அது படிப்பிற்கு மதிப்பெண்ணிற்கு மட்டுமான விருப்பம். அதைத்தாண்டி திருக்குறள் பற்றிய விரிவான அறிவின் தேவை இருக்கவில்லை. பின்னர் பள்ளி-கல்லூரிப் படிப்புகள் முடிந்து, வேலைக்கு வந்ததற்குப் பிறகு தான், திருக்குறள் பற்றி நிறைய தெரிந்துகொள்வதற்கான வாய்ப்புகளும் திருக்குறளின் அருமையும் புரிய ஆரம்பித்தது. அந்த மாதிரியான ஒரு மனநிலையில் இருந்தபோது, BAY AREA KURAL KOODAM ஆண்டுதோறும் நடத்திக்கொண்டிருக்கிற “ஒரு டாலர் ஒரு குறள்” என்ற நிகழ்ச்சியைப் பற்றி நான் கேள்விப்பட்டேன். இங்குள்ள இந்திய தமிழ்க் குழந்தைகளுக்கு திருக்குறளை எப்படியாவது அறிமுகம் செய்து பழக்கிவிடவேண்டும் என்கிற அந்த முயற்சி எனக்கு ஆச்சரியத்தைத் தந்தது. அப்போதுதான் பே ஏரியா குறள் கூடத்தின் நிறுவனர் திரு. திருமுடி துளசிராமன் அவர்களுடைய அறிமுகம் ஏற்பட்டது. திருக்குறள் ஒப்பித்தல் நிகழ்ச்சி நடத்தும் விதம், கலந்து கொள்ளும் குழந்தைகளின் எண்ணிக்கை 2017-2018 லேயே 8000 - 9000 திருக்குறள்களை மனனம் செய்து அமெரிக்க மண்ணில் வாழும் இந்தியக் குழந்தைகள் மேடையில் வந்து சொல்லுதல் இதையெல்லாம் பார்த்தேன். இவ்வளவு சிறந்த முறையில் நிதி செலவு செய்து சிறப்பான விழாவாகச் செய்வதைப் பார்த்து நான் மனம் நெகிழ்ந்து போனேன். இவரைப் போலவே நம்முடைய திருக்குறளுக்கு நாமும் ஏதாவது செய்யவேண்டும் என்று உந்தப்பட்டேன். எனவே எனக்குத் தெரிந்த கலைத்துறை வழியாக, திருக்குறளுக்கும், இந்த விழாவுக்கும், பங்குகொள்ளும் குழந்தைகளுக்கும் உபயோகமாக இருக்கும்வகையில் ஏதாவது செய்ய நினைத்தேன். திருக்குறள் இசைவடிவை யோசித்து திருமுடியிடம் பேசினேன். “Sir , நீங்க இந்த விழாவை நடத்துகிறீர்கள். நன்றி சொல்வதற்கு வார்த்தைகளே கிடையாது. என் சார்பாக நான் வந்து இதை ஒரு இசை வடிவில் ஒரு சின்னதா ஒரு 5 நிமிடத்துக்கு இசை மாதிரி போட்டு நான் கொடுக்கட்டுமா? அதை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? அது விழாவிற்குப் பயனுள்ளதாக இருக்குமா என்று கேட்டேன். HE WAS VERY IMPRESSED. திருமுடியின் இடைவிடாத ஊக்கத்தினால், எனக்கு இந்த திருக்குறள் இசைப்பாடலை முயன்று செய்யவேண்டும் என்கிற ஆசை, வெறி எல்லாமே வந்தது. ஊக்கமுடைமை வெற்றி தரும் என்று குறள் சொல்வது போல இந்த எண்ணம் வெற்றிபெற்று இன்று மூன்றாம் வருடமாக திருக்குறள்களை இணைத்து இசைத்துக் கொண்டிருக்கிறோம்.

**குறளுக்கான இசைக்கோர்வை எவ்வாறு உருவானது? இசைக் கோர்வை உருவாக்குவதில் என்னவிதமான தடைகள் இருந்தன?**

எல்லாக் செய்யுள்களுக்கும் ஒரு இசைஓட்டம் இருந்துகொண்டுதான் இருக்கிறது. இது என்னுடைய

அனுபவப்பூர்வமான கருத்து. நீங்கள் திருக்குறள்களை எப்படிப் பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அந்த இசைக்கோர்வு நம் கண்ணுக்குப் புலப்படும். இது என்னுடைய கருத்து. பொதுவாக எல்லாருக்கும் தெரிந்திருப்பது என்னவென்றால், முதல் வரியில் நான்கு சொற்களும், இரண்டாம் வரியில் மூன்று சொற்களும் ஆக திருக்குறள் ஏழு வார்த்தைகள் கொண்டது. அது உண்மைதான். எல்லாக் குறளுக்கும் பொருந்தும்தான். ஆனால் அசை மற்றும் வார்த்தையின் நீளம் எல்லாக் குறளுக்கும் ஒரே மாதிரி இருப்பதில்லை.



உதாரணமாக இந்த இருகுறள்களைப் பார்க்கலாம்,

கற்க கசடற கற்பவை கற்றப்பின்
நிற்க அதற்கு தக

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

முதல் குறள் ஒரு குறிப்பிட்ட இசை அளவீட்டில் இருக்கிறது. ஆனால் இதே இசை அளவீடு அடுத்தக் குறளுக்குப் பொருந்தாது. நீளம் அதிகம்.

இசையோடு பாடவேண்டும் என்பதற்காக மிகவும் பழைமைத் தன்மையானதாகவோ அல்லது புதுமையான முயற்சி என்பதால் மேல்நாட்டுத்தாக்கமானதாகவே குறளுக்கான இசைஅமைப்பு இருந்துவிடக்கூடாது. யாரும் எளிதாகக் கேட்டவுடன் மகிழும் வகையில் எளிதாகவும் வார்த்தைகளைப் புரிந்துகொள்ளும் வகையில் வீரியமிக்க இசையாகவும் இருக்கவேண்டும் என்று வரையறைப்படுத்திக் கொண்டேன்.

உண்மையைச் சொல்லவேண்டுமென்றால், தயார்படுத்திய இசைக்குள் தேவையான திருக்குறள்களை இணைக்கும் பணியை திருவள்ளுவரின் திருவருள், அல்லது எனது இசை மற்றும் தமிழாசிரியரின் குருவருள், அல்லது அனைத்திற்கும் மேலான இறையருள் தான் உதவியது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

ஏனெனில், தமிழ் எனது தாய்மொழி, தமிழ் எனக்குத் தெரியும், தமிழ்ப் பிடித்த மொழி என்றாலும் 1330 குறள்களும் மனப்பாடம் இல்லை. நான் இசைக்கோர்வையை மனதிற்குள் பாடிப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே வேண்டிய குறள்கள் அந்தந்த நேரத்தில் சரியாக வெளிப்பட்டன.

அவற்றை இசையோடு பாடிப்பார்த்தபோது எனக்குள் ஒரு புதிய நம்பிக்கை உருவாயிற்று.

**நீங்கள் முதல்முதலில் திருக்குறளுக்கு இசை வடிவம் கொடுத்து அளித்தபோது அதை மற்றவர்கள் எப்படி உள்வாங்கிக் கொண்டார்கள்?**

இது ஒரு நல்ல கேள்வி. நான் குறளுக்கு இசைவடிவம் கொடுத்துவிட்டேன். ஆனால் முதன்முதலில் குழந்தைகளிடம் கொண்டுபோகிறேன். நாங்கள் ஒரு சிறு இசைக்குழு. இந்தக் குழுவில் இருக்கும் குழந்தைகள் வாத்தியக் கருவிகளை நன்கு வாசிப்பார்கள். பாடுவார்கள். ஏதேனும் கலைநிகழ்ச்சிகளுக்கு இசைநிகழ்ச்சி என்றால் நான் அவர்களைப் பயிற்றுவிப்பேன். இதை என்னுடைய மகிழ்ச்சிக்காக செய்கிறேன் என்று எடுத்துக்கொள்ளுங்களேன். எனவே அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களிடம் குறளைப் பற்றியும் இதற்கு இசை அமைத்ததையும் குழந்தைகளைப் பாடவைக்கப்போவது பற்றிச் சொன்னபோது அவர்கள் அதை நம்பி ஊக்கப்படுத்தினார்கள்.

இந்தக் குழுவில் இருக்கும் எல்லாக் குழந்தைகளும் அமெரிக்காவில் பிறந்து வளர்ந்தவர்கள். இவர்களுக்குள் தமிழ் எந்தளவுக்கு அறிமுகம் ஆகியிருக்கும்? ஒருவேளை வீட்டிற்குள் மட்டும் பேசியிருக்கலாம். சில குழந்தைகள் வார இறுதியில் ஒன்றிரண்டு மணிநேரங்கள் தமிழ் கற்றுக்கொள்ளக்கூடும். ஆனால் இவர்கள் ஒரு அரைமணிநேரத்திற்குள்ளாகவே 10-15 குறள்களை மனப்பாடம் செய்து பயிற்சி செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். அடுத்த பயிற்சிக்காக சந்தித்தபோது குழந்தைகளின் பெற்றோர்கள், "நாங்களும் வீட்டில் கற்க கசடற, அகர முதல என்று இசைக்குறள்களையே தான் முணுமுணுத்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னபோது நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. பல முறை பயிற்சிக்குப் பிறகு, மேடையேறுவதற்குமுன் இதைப் பார்க்கும்படி திருமுடியை அழைத்திருந்தோம். நாங்கள்

என்ன செய்யபோகிறோம் என்பது தெரியாமல் வந்தவர் எங்கள் நிகழ்ச்சியைப் பார்த்து கண்கலங்கி உணர்ச்சி வயப்பட்டவராய் என்கையைப் பிடித்து என்னைப் பாராட்டி ஊக்கப்படுத்தினார். பிறகு எங்கள் திருக்குறளிசைப் பாடல் அரங்கம் ஏறிற்று. பாடல் முடிந்தவுடன் அரங்கத்தில் இருந்த அனைவரும் எழுந்திருந்து கரவொலி எழுப்பி எங்களைப் பாராட்டினார்கள். 5 minutes of non-stop Claps and standing ovation. இது எங்களுக்கு ஒரு பெரிய டானிக். மக்கள் அதை உள்வாங்கிக்கொண்ட விதமே எங்களை அடுத்தடுத்த வருடங்களுக்கு தயார்படுத்தியது.

**இதுவரைக்கும் எத்தனை திருக்குறள்களை பாட்டுகளாக நீங்கள் தயார்படுத்தியிருக்கிறீர்கள் ?**

2018 ல் முதல் இசைக் கோர்வை அமைத்து அரங்கேற்றினோம். 2019 ல் எங்களுடைய 2வது இசைக்கோர்வை அமைத்து அரங்கேற்றினோம். இந்த வருடம் 2020 ல் 3வது இசைக்கோர்வை அமைத்து இருக்கிறோம். மொத்தமாக கிட்டத்தட்ட 80 திருக்குறள்களைப் பயன்படுத்தி இருக்கிறோம்.

இரண்டாவது முறை இசையமைத்தபோது வித்தியாசமாகச் செய்யலாம் என நினைத்து

அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

போன்ற நீளமான குறள்களை தேர்ந்து எடுத்தோம். நீளத்திற்குத் தகுந்தாற்போல பக்திமயமான ஒரு இசைஅமைப்பை வைத்தோம். சில இடங்களில் பேசுவது போன்று அமைப்பை குறள்பாடலில் வைத்திருந்தோம்.

இந்த வருடம் 3வது இசைக்கோர்வையில் ஜதியோடு கூடிய இசையமைப்பு செய்திருக்கிறோம், கூடவே, தமிழர் மரபு இசைக்கருவியான தாரைதப்பட்டையையும் அடிநாதத்தில் பயன்படுத்தி இருக்கிறோம்.

முதல்வருடத்தில் (2018 ) பியானோ மற்றும் வயலினைப் பயன்படுத்தியிருந்தோம். இரண்டாவது வருடத்தில் (2019) பியானோ, வயலினுடன், புல்லாங்குழல், தபேலா இரண்டையும் சேர்த்திருந்தோம். இந்த வருடம் 2020ல் மேற்சொன்ன நான்கு இசைக்கருவிகளோடு சாக்ஸபோன், கிளாரிநெட் இரண்டையும் சேர்த்திருக்கிறோம். மேலும் அடிநாதமாக தாரைதப்பட்டை. உங்களின் ஏகோபித்த ஆதரவுடன், இந்த வருடத்தில் இசைகுழுவின் தரத்தையும் கூட்டியிருப்பதாக நினைக்கிறேன்.

**நீங்கள் இந்த பாட்டுகளுக்கெல்லாம் திருக்குறள் தேர்வு எந்த அடிப்படையில் செய்தீர்கள் ?**

ஒரே குறளே மீண்டும் வந்துவிடாமல் கவனித்துக் கொண்டேன். அனைவருக்கும் அறிமுகமான குறள்களாக தேர்ந்தெடுத்தோம். அதேவேளையில் குழந்தைகள் பாடப்போகிறார்கள் என்பதால், நன்றி, கல்வி, நட்பு போன்ற அறத்துப்பால், பொருட்பால் பாடல்களைத் பயன்படுத்தினேன். முதல் இரண்டு பாடல்தொகுப்பிலேயே 60 குறள்களுக்கு மேல் பயன்படுத்திவிட்டதால் 3வது வருடத்தில் குறள்தேர்வுக்கு மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருந்தேன். அந்த நேரத்தில் சென்னையிலிருந்து விஜயலக்ஷ்மி தண்டபாணி அவர்கள் செய்த உதவியை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவர்கள் திருக்குறள்களை வேண்டிய இசைவடிவத்தில் பிரித்து எடுத்து உதவிசெய்தார்கள்.

**உங்களுடைய இசைக் குழு பற்றிச் சொல்லுங்கள்.**

எங்களுடைய இசைக்குழு பத்துக் குழந்தைகளால் ஆன குழு.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு இசைக்கருவியில் தேர்ச்சி பெற்றவர்கள்.

யுவானந்த் சரவணன், ஹரிணி ஆனந்த், நிஷா குமார், அபிநயா செந்தில், ஷ்ரவணி வெங்கடேஷ்- ஐந்து பேரும் பியானோ

ஸ்ராவ்யா பிரதீப், கல்யா பிரதீப் - புல்லாங்குழல்

அஜித் சரவணன் - கிட்டார்

ஷ்ரவணி வெங்கடேஷ் - கிளாரினெட்

ப்ரத்யுன் வெங்கடேஷ் - ஸாக்ஸபோன்

அஜித் சரவணன், கோகுல் ஆனந்த், ப்ரத்யுன் வெங்கடேஷ் - ஸ்ட்ரிங்ஸ்

கோகுல் ஆனந்த், ஹரிணி ஆனந்த், அபிநயா செந்தில் - வயலின்

வைஷ்ணவி முத்துசாமி, கல்யா பிரதீப், ஷ்ரவணி வெங்கடேஷ், நிஷா குமார், அபிநயா செந்தில், ஸ்ராவ்யா பிரதீப் - வாய்ப்பாட்டு


நிஷா குமார்



ஆனந்த் வெங்கடாசலபதி

எங்களுடைய எல்லா நிகழ்ச்சிகளுக்கும் திருக்குறள் மற்றும் டீஸர் வீடியோ செய்து உதவிய ஆனந்த் வெங்கடாசலபதி.

பாட்டுகளின் தன்மைக்கு ஏற்றாற்போலவும் இசைக் கருவிகளின் தேவைக்கு ஏற்றாற்போலவும் பாடுபவர்கள் தங்களுக்குள் மாறிமாறிப் பாடுவார்கள்.


இந்தக் குழந்தைகள் அமெரிக்காவிலேயே பிறந்து வளர்ந்தாலும் கூட தமிழின் சிறப்பான மெல்லினம் வல்லினம் ழகரம் இவற்றை மிக அழகாக உச்சரித்து பாடுவதுதான் இவர்களின் தனித் திறன் என்ற நான் உணர்கிறேன்.

### எவ்வாறு, எவ்வளவு நேரம் பயிற்சி செய்கிறீர்கள்?

ஒரே மாதிரியான நேரம் என்று இல்லை. அவ்வப்போது வாரம் ஒருமுறை எல்லாருக்கும் வசதியான ஒரு நேரத்தில் இசைக்குழு உறுப்பினர் யாராவது ஒருவர் வீட்டில் அனைவரும் கூடி ஒன்றிரண்டு மணிநேரங்கள் பயிற்சி செய்வோம். அவ்வாறு கூடுவதற்கு முன்னதாகவே, குறள்பாடலுக்குத் தகுந்த இசைக்கோர்வையை முறையாக எழுதி நோட்ஸ் ஆக ஒவ்வொருவருக்கும் அனுப்பிவைப்பேன். அநேகமாக நாங்கள் கூடுவதற்குள் அனைவரும் அதைத் தனித்தனியாக பயிற்சி செய்துவந்திருப்பார்கள். அனைவரும் கூடி பாடிப்பார்க்கும்போது ஏற்படும் தவறுகளையும், ஒத்திசைவுகளையும் சரி செய்வேன். வாரம் ஒருமுறையாக சிலதடவைகள் கூடிப் பயிலும்போது திருக்குறள் பாடலாக உருமாறியிருக்கும்.



யுவானந்த் சரவணன், அஜித் சரவணன்



கோகுல் ஆனந்த், ஹரிணி ஆனந்த்



ஸ்ராவ்யா பிரதீப், கல்யா பிரதீப்



ஷ்ரவணி வெங்கடேஷ், ப்ரத்யுன் வெங்கடேஷ்




அபிநயா செந்தில்



வைஷ்ணவி முத்துசாமி

உங்கள் எதிர்காலத் திட்டம் என்ன?

திருக்குறளை எல்லாருக்கும் கொண்டுபோய்ச் சேர்ப்பதுதான். இசைப்பாடல் வடிவில் கொடுக்கும்போது கேட்பவர் எளிதில் மனதில் பதிகிறது. 1330 குறள்களையும் மிகப் பொருத்தமான வசீகரமான இசையுடன் அனைவருக்கும் கொண்டுபோய் சேர்க்கவேண்டும். அடுத்த தலைமுறைக்கும் இதைக் கொண்டுபோக வேண்டும் என்பது எனது எதிர்காலத்திட்டம்.

இதுவரை நாங்கள், எங்கள் இசைக்குழு ஓரளவுக்கு வெற்றிகரமாக இந்தக் குறள்பாதையைக் கடந்து வந்திருக்கிறது என்றால், அதற்கு விரிகுடாக் குறள் கூடம், அதன் நிறுவனர் திருமுடி துளசிராமன் தரும் ஊக்கமும், விரிகுடா மட்டுமல்லாமல் திருக்குறள் விழாவிற்கு வருகைதரும் அனைத்து மக்களின் ஏகோபித்த ஆதரவும் தான் காரணம். எங்களை பாராட்டி ஆதரித்து வாழ்த்தும் மக்களுக்கு எங்கள் குழுவின் சார்பாக நன்றிகள்.

அடுத்ததாக, இசைக்குழு குழந்தைகளின் பெற்றோர்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கொடுக்கும் உற்சாகம், ஊக்கம், நம்பிக்கை.

ஏற்கனவே வடிவம்பெற்ற திரைப்பாடல்களுக்கு பயிற்சிசெய்தால் அது எந்தமாதிரியான பாடலாக வரும் என்பது நமக்குத் தெரியும். ஆனால் செய்யுள் வடிவத் திருக்குறளுக்கு இசைவடிவம் எனும்போது அது எப்படியான பாடலாக வரும் என்பது தெரியாதபோதும், பெற்றோர்கள் கொடுத்த ஊக்கமும் உற்சாகமும் என்மீது அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையும் என்னை மிகவும் பலப்படுத்தியது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் என் நன்றிகள் உரித்தாகுக.

என் எதிர்காலத் திட்டத்தை செயல்படுத்த இவை போதுமான உந்துசக்திகள் என்று நம்புகிறேன்.

## குறளை இசையாக்கும் முயற்சியின் பயிற்சியில் ...













# Komala Vilas

## serving you for over 18 years





| Breakfast | Lunch | Dinner |
|---|---|---|
| 8:30am till 11:30am | 12:00am till 2:30pm | 5:30pm till 9:30pm |
| Idly, Vadai, Variety of Dosas, Uppuma and many more | Every day different menu, We serve traditional lunches | Dinner is a la carte with Tiffin and variety rice. |

*If the food and service are good let your friends know about them*
*Otherwise bring it to our attention*

**We cater for any function such as:**
**Seemandham,**
**Poonal,**
**Weddings,**
**House Warming,**
**Birthdays, etc.**

*Freshly made*
பருப்பு தேங்காய்
தேன்குழல்
South Indian style Laddu
South Indian style Mixture
Sweet Poli, etc.

available at
**Komala Vilas.**

**408.733.7400**



**Hours:**

**Mon, Wed thru Friday:**
8:30am to 2:30pm, 5:30pm to 9:30pm
**Saturday and Sunday**
8:30am to 11:30am (Breakfast)
12:00noon to 2:30pm (Lunch) 5:30pm to 9:30pm (Dinner)

**Unlimited Lunch**
Back on popular demand


# Komala Vilas

*Where taste meets tradition.*


**1020 E El Camino Real (El Camino Real & Henderson)**
**Sunnyvale CA 94087**

**Tel: 408.733.7400**

# வள்ளுவம் தீட்டிய விரல்கள்



Amrutha Velivelli
Grade 9, Age 14,
Fremont, CA




Prathika Murugesan
Grade 2, Age 7,
Fremont, CA









Nikita Murugesan
Grade 4, Age 9,
Fremont, CA

# COCONUT HILL
## INDIAN GROCERY

**Party Hall Available**
(70 - 100 people)

*Our NEW Union City location is*

# NOW OPEN

**SERVING YOU IN FOUR CONVENIENT LOCATIONS**

**4**

Fremont (Warmsprings), Sunnyvale, San Jose, Union City

| | | | |
|---|---|---|---|
| 46129 Warm Springs Blvd<br>Fremont, CA 94539<br>**510.656.9671**<br>Store Hours: **9:00AM - 10:00PM** | 554 S Murphy Ave<br>Sunnyvale, CA 94086<br>**408.738.8837**<br>Store Hours: **9:00AM - 10:00PM** | 3325 San Felipe Rd<br>San Jose, CA 95135<br>**408.528.9600**<br>Store Hours: **9:00AM - 10:00PM** | 34720 Alvarado Niles Rd<br>Union City, CA 94587<br>**510.941.4979**<br>Store Hours: **9:00AM - 9:00PM** |

**WE WELCOME YOU TO OUR STORES UNIQUE & QUALITY PRODUCTS**

● *Elantha Vada* ● *Samahan* ● *Thoothuvalai* ● *Keezhaanelli* ● *Nerunji* ● *Sitrathai* ● *Vasambu* ● *Arisi Thipeli* ● *Kandanthippili* ● *Kamarkattu*



We carry
**Kottakal Ayurvedic** medicines










*Farm raised fresh Halal*
***Naattu Kozhi & Baby Goat***

**Freshly Grated Coconut Available**







**Free Door Delivery for orders over $50**

*We sell Manthakali Keerai, Thandu Keerai, MuLa Keerai, Siru Keerai, Murungai Keerai, Vallarai Keerai, Brahmi Keerai, Pulicha Keerai, Ponnangani Keerai, Chukka Keerai, Parupu Keerai, Venthaiya Keerai, Kadughu Keerai, Kodi Pasalai Keerai and more...*






Vihana Venkatesh
Grade 1, Age 7,
Livermore, CA






Subikshashri Palanisamy Mythili
Grade 3, Age 8,
Sunnyvale, CA





தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.

சைந்தவி.ச
வயது:5
KG



Saindhavi Sankarganesh
Grade KG, Age 5,
San Ramon, CA




Sahana Janarthana,
Grade 3, Age 9,
Fremont, CA

# குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்






Mahathi Mohankumar,
Grade 3, Age 9,
Pleasanton, CA






Kavin Chandran
Grade 2, Age 7,
Pleasanton, CA






Harshini Nagappan
Grade 5, Age 10,
Mountain View, CA





Advaith Anand
Grade 8, Age 13,
Fremont, CA

# கால இட எல்லைகளைக் கடந்த உலகப் பேரிலக்கியம்

- முனைவர் பா. ஜெய்கணேஷ்



இரண்டாயிரம் ஆண்டுகாலத் தமிழ்ச் சமூக அறவியலின் அடையாளமாக திருக்குறள் இன்றும் திகழ்கிறது. எழுதப்பட்ட காலம் தொடங்கி எவ்விதத் தங்குதடையும் இல்லாமல் வாசிப்புத்தளத்தில் பெருகவனம் பெற்ற பனுவலாகத் திருக்குறள் திகழ்வது அதன் நூலுருவாக்க முறையைப் பறைசாற்றி நிற்கிறது.

படிப்பதற்கும் மனனம் செய்வதற்கும் எளியவடிவம் எழுதுவதற்குக் கடினவடிவம் என திருக்குறளின் குறள்வெண்பா கட்டமைப்பு தேர்வு திருவள்ளுவரின் செய்நேர்த்தி. அறம், பொருள், இன்பம் என மனித வாழ்வியலின் தன்மைகளை, அவற்றின் ஒழுக்கநெறி முறைகளை மூன்றாகப் பகுத்து 133 அதிகாரங்கள் வகுத்து 1330 குறட்பாக்களால் திருவள்ளுவர் உருவாக்கிய திருக்குறள் தமிழ்ச் சமூகத்தின் எல்லைகள் கடந்து உலகப் பேரிலக்கியமாக மாறியது.

அறம், பொருள், இன்பம் பற்றிக் கூறிய வள்ளுவர், வீடுபேறு குறித்து தனிஅதிகாரம் உருவாக்காததற்குக் காரணம் என்னவாக இருக்கும்? எவனொருவன் இந்தமூன்றையும் தன்வாழ்வியலில் நெறிப்பட கடைபிடிக்கிறானோ அவனுக்கு வீடுபேறு தன்னாலே அமையும் என்பது வள்ளுவர் வகுத்த வீடுபேறுநெறி.

### காலத்தை வென்ற குறள்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என அறவியல் நூல்களை நாம் பகுத்தாலும் தலையாயதும் தலைசிறந்ததுமான நூலாக இன்றுவரை திகழ்வது திருக்குறள் ஒன்றே. காலம், சமயம், சமயவாதங்கள், அனல்வாதம், புனல்வாதம், கரையான் என எல்லாவற்றையும் தன்னுள் செரித்து திருக்குறள் கடந்துவந்த வரலாறு எளிமையான ஒன்றல்ல.

நூற்றுக்கணக்கான நூல்கள் எழுதி காணாமல்போன பட்டியல் எத்தனையோ. ஒற்றைநூல் எழுதி ஒருலட்சம் நூற்றாண்டுகள் கடக்கும் பேராற்றல் திருக்குறளுக்கு உண்டு.

மொழியைப் பேசத் தொடங்கிய குழந்தை முதல் தள்ளாடி நடைபோடும் முதியவர்வரை திருக்குறள் எல்லாரையும் பீடித்திருக்கிறது. கற்றறிந்த புலவர் நாவில் தொடங்கி பள்ளி அறியாப் பாமரர்களின் நா வரை திருக்குறள் நடனமாடாத நாவே இல்லை.

### உரை பல கண்ட குறள்

திருக்குறள் இரண்டாயிரம் ஆண்டுகள் வாசிப்பில் இத்தன்மைகளில் எல்லாம் நிலைபெறப் பலர் காரணமாக இருந்துள்ளனர். அவர்களில் குறிப்பிடத்தக்கோர் இலக்கிய ஆசிரியர்கள், திருக்குறள் உரையாசிரியர்கள், பிற இலக்கண இலக்கிய உரையாசிரியர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், பதிப்பாசிரியர்கள், ஆய்வாளர்கள் என பலரைச் சுட்டமுடியும்.

திருவள்ளுவருக்குப் பிறகு அவரின் கருத்துகளில் ஈடுபாடும் பற்றும் கொண்ட இலக்கிய நூலாசிரியர்கள் அவரின் கருத்துகளைத் தழுவியதோடு அவரின் அடிகளையும்கூட அவ்வாறே பயன்படுத்திக் கொண்டனர். தமிழ் இலக்கிய உரை மரபில் கி.பி. பத்தாம் நூற்றாண்டுக்கு முன்னதாக உரைபெற்ற ஒரே நூலாகத் திகழ்வது திருக்குறள் மட்டுமே. அதன் தொடர்ச்சியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்பு வரை திருக்குறள் பத்து உரைகளைப் பெற்றது. இது ஒட்டுமொத்த தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே வேறு எந்தநூலுக்கும் நிகழாதது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு தொடங்கி இன்றுவரை எழுதப்பட்ட திருக்குறள் உரைகளை எண்ணிப்பார்த்தால் கடற்கரையின் மணல் துகளை எண்ணுவதற்குச் சமமாகவே தோன்றும். திருக்குறள் உரைகள் மட்டுமல்லாது தொல்காப்பியம் உள்ளிட்ட வேறுபல நூல்களுக்கு எழுதப்பட்ட உரைகளிலும் திருக்குறள் எண்ணிலடங்கா அளவில் மேற்கோள்களாகக் காட்டப்பட்டு வாசிப்பில் தொடர்ந்து நிலைபேறடைந்துள்ளன.

### தொட்டவரைத் தொடரும் குறள்

உரை மட்டுமல்லாது தமிழ்ப்பதிப்புச் சூழலிலும் தனிமுத்திரை பதித்த பனுவலாகத் திகழ்கிறது திருக்குறள். பதினாறாம் நூற்றாண்டிலேயே அச்சுஊடகம் தமிழகத்திற்கு வந்துவிட்டாலும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் தமிழின் பேரிலக்கியங்கள் அச்சில் நிலைபெற்றன. அதில் முதல்நூலாக இடம்பெறுவது திருக்குறளே.

1812ஆம் ஆண்டு திருக்குறள் முதல்பதிப்பு பெற்றபிறகு இன்றுவரை அதற்கு வெளிவந்த பதிப்புகள் மலையைத் தொட்டுநிற்கின்றன. எல்லாவித வடிவங்களிலும் எல்லாவித வாசகர்களுக்கும் தேவையான திருக்குறள் பதிப்புகள் அச்சில் வெளிவந்துள்ளன.

பதிப்புகளைப் போலவே மொழிபெயர்ப்பிலும் திருக்குறள் தனித்து திகழ்கிறது. பதினெட்டாம் நூற்றாண்டிலிருந்து மொழிபெயர்ப்பு பெற்ற திருக்குறள் இன்றுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு உலகமனித நாகரித்தின் அடையாளமாகத் திகழ்கிறது.

திருக்குறளைத் தொட்டு அதனைப் படித்து உள்நுழைந்த எல்லா வெளிநாட்டினரும் தம்மொழியில் வெளிவரவேண்டும் என்று விரும்பிய நூலாகத் திருக்குறள் மாறியது குறிப்பிடத்தக்கது.

மொழிபெயர்ப்பைப் போலவே திருக்குறள் ஆய்வுமரபிலும் தனித்தன்மை பெற்று தனித்து அடையாளம் பெற்றது. ஆய்வுக் களங்களுக்கான அத்தனை உள்ளடக்கங்களையும் திருக்குறள் சுமந்து தமிழ் ஆய்வியலையும் செழுமைப்படுத்திச் சென்றுள்ளது.

## சமயப் பொதுமை

திருக்குறள் இவ்வாறு எல்லாத்தளங்களிலும் இன்றுவரை நிலைபேறு பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் அதன் கருத்துவடிவம் என்பதைக் கடந்து அதன் சமயப்பொதுமையும் ஆகும். சமயச் சட்டகங்களுக்குள் அடங்கியும் அடங்காமலும் எல்லாக் காலங்களிலும் ஏதோ ஒரு குப்பிக்குள் அடைபடாமல் திருக்குறள் வந்திருக்கிறது என்றால் திருவள்ளுவரின் திட்டமிடப்பட்ட தொலைநோக்குப்பார்வையே காரணம் எனலாம்.

தமிழ்ச் சமூகம் தொலைநோக்குப்பார்வை கொண்ட சமூகம் என்பதைத் திருக்குறள் இன்றுவரை பறைசாற்றி நிற்கிறது. இனியும் பறைசாற்றும்.

---

முனைவர் பா. ஜெய்கணேஷ் (இளமாறன்) சென்னை எஸ். ஆர். எம். பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராயத்தின் செயலராவும், தமிழ்த் துறையின் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார். 'தமிழ் யாப்பிலக்கண உரை வரலாறு' என்னும் தலைப்பில் முனைவர் பட்டம் பெற்ற இவர் இதே தலைப்பில் வெளிவந்த நூலிற்காக 2015ஆம் ஆண்டு இந்தியக் குடியரசுத் தலைவர் கையால் இளம் ஆய்வறிஞர் விருதினைப் பெற்றவர். 14 நூல்கள், 50க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் எழுதி வெளியிட்டுள்ளார். பொதிகை தொலைக்காட்சியில் முகரம் என்னும் தமிழ் மணம் கமழும் நிகழ்ச்சியை வடிவமைத்து வழங்கி வருகிறார்.

# குறள் சொல்லும் குரலோடு
# வள்ளுவம் தீட்டிய விரல்கள்



Aatish Shrikanth
Grade 5, Age 11,
Fremont



# உழவும் குறளும்



சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. (1031)

உலகம் பல தொழில் செய்து சுழன்றாலும் ஏர்த் தொழிலின் பின் நிற்கின்றது, அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே சிறந்தது.





ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.(1038)

உழுவதைக் காட்டிலும் உரம் இடுவது நல்லது; நீர்ப் பாய்ச்சுவதைக் காட்டிலும் களை எடுத்தபிறகு பயிரைக் காவல் செய்வது நல்லது.

தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.(1037)

ஒரு பலம் புழுதி கால்பலம் ஆகும்படி உழுது காயவிட்டால், ஒரு பிடி எருவும் இடவேண்டாமல் அந் நிலத்தில் பயிர் செலுத்தி செழித்து விளையும்.





இரவார் இரப்பார்க்கொன்று ஈவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர். (1035)

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், பிறரிடம் சென்று இரக்கமாட்டார், தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவார்.



உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.(1036)

எல்லாப் பற்றையும் விட்டுவிட்டதாகக் கூறும் துறவிகள்கூட உழவரின் கையை எதிர்பார்த்துதான் வாழ வேண்டும்.



உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து. (1032)

உழவுத் தொழிலைச் செய்ய முடியாமல் பிற தொழிலைச் செய்யச் செல்வோர் எல்லாரையும், உழவர்களே தாங்குவதால் அவர்களே இந்த உலகத்தவர்க்கு அச்சாணி ஆவர்.



உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.(1033)

உழவு செய்து அதனால் கிடைத்ததைக் கொண்டு வாழ்கின்றவரே உரிமையோடு வாழ்கின்றவர், மற்றவர் எல்லோரும் பிறரைத் தொழுது உண்டு பின் செல்கின்றவரே.



மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கோட்டை மேடு கிராமத்தின் அன்றாட நிகழ்வுகளை உயிர்த்துடிப்புடன் குறள்வழி காட்சிப்படுத்தியவர் மாடக்குளம் பிரபாகரன்.

# திருவள்ளுவரும் திருக்குறளும் - அரிய தகவல்கள்

திருவள்ளுவரின் அதிகாரப்பூர்வ படம் திரு. வேணுகோபால் ஷர்மா அவர்களால் 1954ல் வரையப்பட்டது.

இதனை 1957 இல் தமிழக அரசு ஏற்றது. அப்போதைய முதல்வர் காமராஜர்.

1959 இதனை மத்திய அரசு ஏற்றது, அதைத் தொடர்ந்து அங்கீகாரமாக 1960ல் திருவள்ளுவர் படத்துடன் மத்திய அரசு 15 நயாபையாவுக்கான சிறப்பு அஞ்சல்தலை வெளியிட்டது.

தமிழக அரசு போக்குவரத்துப் பேருந்துகளிலெல்லாம் திருவள்ளுவர் படமும், திருக்குறளும் இடம்பெற்றன. இடம்பெறச் செய்தவர் பேறிஞர் அண்ணா. தற்போது சென்னை மெட்ரோ ரயிலின் உட்புறமும் திருக்குறள் இடம்பெற்றுள்ளது.

இந்த படத்தை 1970 இல் திமுக அரசு தமிழக அரசின் அதிகாரப்பூர்வ படம் ஆக்கியது.

திருவள்ளுவர் நினைவாக சென்னையில் வள்ளுவர் கோட்டம் 1976இல் அமைக்கப்பட்டது. இங்கு உள்ள கல்தேரின் தூண்களில் 1330 குறள்களும் பொறிக்கப்பட்டுள்ளன.


தமிழ்நாடு அரசால் திருவள்ளுவர் பெயரில் 'தமிழக அரசு விருதுகள்' 1986ல் இருந்து வழங்க ஆரம்பிக்கப்பட்டு இன்றும் தொடர்கிறது.


தமிழ்நாடு அரசு 2000 வது ஆண்டில் கன்னியாகுமரியில் 133 அடி உயரத்தில் திருவள்ளுவர் சிலை அமைத்தது.

2002 ஆம் ஆண்டில் திருவள்ளுவர் பெயரில் வேலூரில் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.

திருக்குறளை தேசிய இலக்கியமாக அறிவிக்க வேண்டும் என்று தமிழக அரசு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானத்தை இயற்றியது.

தமிழ்நாடு அரசின் செலவில் சீன, கொரிய, அரபி மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்ப்புப் பணிகள் நடைபெற்று குறள் உலகெங்கும் பரவிவருகிறது.











## திருக்குறள் மொழிபெயர்ப்பு

1975 லேயே கிட்டத்தட்ட 20 முக்கிய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது திருக்குறள். சமஸ்கிருதம், இந்தி, தெலுகு, கன்னடம், மலையாளம், பெங்காலி, மராத்தி, குஜராத்தி, உருது, மற்றும் பர்மிய, மலாய், சீன, பிஜி, ப்ரெஞ்ச், ஜெர்மன், ரஷ்யன், பொலிஸ், ஸ்வீடிஷ், ஆங்கில மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கீழே சில திருக்குறள் மொழிபெயர்ப்புகளின் அட்டைப்படங்கள்,



SANSKRIT



POLISH



ARABIC



MARATI



SOURASHTRA


ORIYA


KANNADA



KONKANI



RUSSIAN



LATIN


ARABIC


BENGALI



MALAYALAM





JAPANESE


URDU


CHINESE


GUJARATI


FIJIAN


FRENCH



TELUGU

ஸ்ரீ Ananda Bhavan

Indian Vegetarian Restaurant

# We do Catering for Wedding Events and Onsite Dosa Party





**SUNNYVALE**
920E Arques Ave,
Sunnyvale, CA 94085
408-735-1111

**MILPITAS**
61, Serra Way #120
Milpitas, CA 95035
408-791-6664

**PLEASANTON**
4515 Rosewood Dr Unit 700,
Pleasanton, CA 94588
925-924-1122

**CUPERTINO**
10745, S De Anza Blvd,
Cupertino, CA 95014.
408-850-0141

**AUSTRALIA**
70-78 Vesper Drive
Narre Warren, VIC-3805
(03) 8786 5551

www.AnandaBhavanUSA.com info@anandabhavanusa.com



மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

— திருவள்ளுவர்

NATURE® MILLS

*Way of healthy living*

100% NATURAL




SHOP ONLINE AT
NATUREMILLS.COM

FREE SHIPPING
FOR ORDERS ABOVE $50

info@naturemills.com
/naturemills
/nature_mills
/nature_mills